கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்

# CHEMMOZHI THAMIZH

## முதல் மொழி

## ஏழாம் வகுப்பு

## 7

பாகம் - 1

## Tamil First Language

@KTBS
NOT TO BE REPUBLISHED

**KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF - 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS, mathematics and 5$^{th}$ to 10$^{th}$ there are three core subjects namely mathematics, science and social science.

**NCF - 2005 has a number of special features and they are:**

- connecting knowledge to life activities
- learning to shift from rote methods
- enriching the curriculum beyond textbooks
- learning experiences for the construction of knowledge
- making examinations lexible and integrating them with classroom experiences
- caring concerns within the democratic policy of the country
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries-integrated knowledge and the joy of learning
- making the child the constructor of knowledge

The new books are produced based on three fundamental approaches namely Constructive approach, Spiral approach and Integrated approach.

The learner is encouraged to think, engage in activities, master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

**Prof. G. S. Mudambadithaya**
Coordinator
Curriculum Revision and Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

© KTBS
NOT TO BE REPUBLISHED

# முன்னுரை

ஒரு மனிதன் மற்றொரு மனிதனோடு, தான் நினைத்த, நினைக்கின்ற ஆழ்ந்தகருத்துக்களை நன்கு வெளிப்படுத்த மொழி என்னும் கருவி மிகமிக அவசியமாகிறது. குழவி பருவத்திலிருந்து மழலைச் சொல் பேசுகின்ற குழந்தை தன் எண்ணங்களை தாயிடம் கூற விழைகிறது. தன் உடன் பிறந்தோரிடமும், உறவினரிடமும் தன் சமுதாயத்தின் வாயிலாகவும் மொழித்திறனை ஊக்கத்தோடு தனது தாய் மொழியிலேயே வெளிப்படுத்துகிறது. எனவே மொழி ஒரு பாலமாக பயன்படுகிறது .

தற்போதய பாடத் திட்டத் தயாரிப்பு, மாநில அரசின் பாடத் திட்டம் 2001 - 2002 இன் அடிப்படையிலும் தேசிய பாடத் திட்டம் 2005 ன் அடிப்படையிலும் நன்கு ஆய்ந்து இப்புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் அடிப்படையான கற்றல் திறன்களை தேசிய பாடத்திட்டம் 2005-ன் நோக்கங்களை மறு ஆய்வு செய்து நன்முறையில் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. பாடத்திட்டம் கற்கும் குழந்தையை மையமாகக் கொண்டும், அவர்களின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் திறன்களை வளர்க்கும் பொருட்டும், இவற்றை ஆதாரமாக் கொண்டும் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது .

குழந்தைகளின் தாய் மொழியுடன் வட்டார மொழியையும் இரண்டற கலக்கும் பொருட்டு இப் பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளியில் தான் கற்ற அறிவுத்திறனை மேன்மைப்படுத்தி தன் அன்றாட வாழ்க்கையைப் பூர்த்தி செய்தும் வாழ வழிவகுக்கிறது. அதாவது சுலபத்திலிருந்து கடினத்திற்கு குழந்தை தன் திறனை வளர்த்துக் கொள்ள ஊக்கமளிக்கிறது .

தேசியக் கல்வித்திட்டம் 1986 இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கற்கும் குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சிக்குத் தேவையான குறிக்கோள்களை மேன்மையாகக் கொண்டு இப்புத்தகம் வெளிவருகிறது .

இப்புத்தகத்தில் அமைந்துள்ள பாடமும், பாடலும் ஒவ்வொரு தனித்திறனை மையமாகக் கொண்டும் எழுதப்பட்டுள்ளது. தாய் மொழிப் பாடத்திற்கு தகுந்தார் போலவும், தனித்தன்மைக் கொண்ட திறன்களை ஊக்கமளிக்கும் வகையிலும் இயற்றப்பட்டுள்ளது .

பாடங்கள், பாடல்கள், நாடகங்கள், இலக்கணங்கள் போன்றவையும், மொழித்திறனை வெளிக்கொணர ஒவ்வொரு பாடத்திலும், மொழிவிளையாட்டு, செயல் பாட்டுத்திறன், வாழ்க்கைத் திறன்கள், விழுமியக் கல்வி போன்ற பொதுக்கருத்துக்களும் உலக அனுபவ

© KTBS NOT TO BE REPUBLISHED

கருத்துக்களையும் இணைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது .

புதிய பாடத்திட்டம் மாணவரது எழுத்துத்திறன் வளர்ச்சியோடு கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களை வளர்ப்பதற்கும் சில வழிமுறைகளைப் பரிந்துரைத்துள்ளது. அதன்படி கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களை வளர்க்க ஒவ்வொரு மாதமும் [ முதல் வாரம் - முதல் வேலை நாள், இரண்டாம் வாரம் - முதல் வேலை நாள், மூன்றாவது வாரம் - முதல் வேலை நாள் எனக்] கிழமைகளை ஒதுக்கி அவற்றிற்குப் பயிற்சி தரலாம். அல்லது பள்ளிச் சூழ்நிலைக்கு ஏற்பத் திட்டமிட்டுக் கொள்ளலாம் .

மாணவரது கேட்டல் திறனை வளர்ப்பதற்கான ஒலி நாடாக்களைப் பள்ளியின் ஆதரவுடன் தயாரித்துப் பயன்படுத்துதல் நன்று .

மாணவரது பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு குறிப்பிட்ட தலைப்புகளை முன்னதாக வழங்கிப் பேசச் செய்தல், நகைச்சுவைத் துணுக்குகள் கூறச் செய்தல், வினாடிவினா நடத்துதல் என இப்பாட வேளையை அமைத்துக் கொள்ளலாம் .

ஒரு பாட வேளையில் குறைந்தது 6 மாணவராவது பேசுமாறு திட்டமிட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஆண்டில் குறைந்தது இரண்டு முறைகளாவது பேசியிருத்தல் வேண்டும் .

படித்தல் திறன் வளர்த்தல் இரு பகுதிகளாக அமையும். பிறர் கேட்டுப்பொருள் உணரும் வண்ணம் நிறுத்திப் படித்தல், குரல் ஏற்றத் தாழ்வுடன் படித்தல், ஒலிப்புப் பிழையின்றி வாய்விட்டு உரக்கப்படித்தல் ஒரு பகுதியாக அமையும் . ஒவ்வொரு மாணவனையும் வாய்விட்டு உரக்கப்படிக்கச் செய்தல் வேண்டும். அடுத்தது படிப்புப் பழக்கம் ஏற்படுத்துதல் மாணவர்களைப் பாடநூல் தவிர நூல் நிலையத்திலுள்ள புத்தகங்கள், பிற புத்தகங்களையும், வார இதழ், மாத இதழ், செய்தித் தாள்களையும் படிக்கச்செய்தல் வேண்டும். அந்தந்த நூலின் சுருக்கத்தை ஒரு குறிப்பேட்டில் எழுதச் செய்தல் வேண்டும். அக்குறிப்பேட்டில் ஆசிரியர் அவ்வப்பொழுது கையொப்பமிடல் வேண்டும். நூல் படித்த விவரங்களைக் குறிக்க பாட நூல் இறுதியில் ஒரு படிவம் கொடுக்கப்பட்டுள்ளது .

இப்படிவத்தைத் தனியே தயாரித்து, மாணவர் விவரங்களை நிரப்பியவுடன் ஆசிரியர் அதிலும் கையொப்பமிட வேண்டும். இவ்வாறு மாணவரது மொழித் திறன்களை வளர்க்க ஆசிரியர் திட்டமிட்டுச் செயலாற்றுதல் நன்று .

- பாடப் புத்தகக் குழு

© KTBS NOT TO BE REPUBLISHED

# TEXT BOOK COMMITTEE

***Chair Person :*** ***Sri.Dananjayan.A.*** *B.Sc., M.A., M.Phil., B.Ed. Principal, Lions Swamy Vivekananda Composite Junior College. Koppal 583 231 [ Karnataka ]*

***Members :*** ***Sri Palayan.P.*** *Promotee Head Master. Govt. Tamil. H.P.S, Lakkavalli. Tarikere Taluk, Chikkamagaluru District.*

***Sri Veerabathiran.A.*** *B.Lit.,Tc.H. Non.Graduate Head Master, Govt.Tamil.Model. H.P. School, New Model Colony [ N.M.C ] Bhadravathi - 577 301.*

***Sri Saravanan.K.*** *Promotee Head Master, Govt. Tamil. H.P.School, Santavery, Birur Zone, Chikkamagaluru District*

***Sri Periyasamy.A.*** *Asst.Master Govt.Tamil.H.P.School, Vishwanagara, Bhadravathi - 577 301*

***Smt Vijayalakshmi.R*** *Retd. Teacher ( Tamil ) B.B.M.P Girls High School.Murphy Town, Ulsoor, Bengaluru - 560 008.*

***Scrutinizer :*** ***Dr.Balakumar.*** *Central Institute Of Indian Language Mysuru.*

***Artist :*** ***Sri Satishpiradar*** *B.E.L. High School, Jalahalli, Bengaluru.*

***Chief Co-Ordinator :*** ***Prof. G.S.Mudambadithaya,*** *Karnataka Text Book Society Bengaluru - 560 085.*

***Advisors :*** ***Sri. Nagendra kumar,*** *Managing Director, Karnataka Text Book Society, Bengaluru - 560 085.*

***Sri. Panduranga,*** *Deputy Director, Karnataka Text Book Society,Bengaluru-560 085.*

***Programme Co-Orditor :*** ***Asharani N.,*** *A.D.P.I. Karnataka TextBook Society, Bengaluru - 560 085.*

NOT TO BE REPUBLISHED @KTBS

## ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ಧರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15 ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರಿಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17 ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

© KTBS NOT TO BE REPUBLISHED

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.


ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು – 03

**(ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ)**
**ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು**
**ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ**
**ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)**
**ಬೆಂಗಳೂರು–85**


NOT TO BE REPUBLISHED ©KTBS

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

**ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು**

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ. ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

## ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

**ಅಧ್ಯಕ್ಷರು**

ಡಾ. ಸುಧಾಕರ, ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಊರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

**ಸದಸ್ಯರು**

ಶ್ರೀ. ಆಶೀರ್ವಾದಂ, ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ. ಬಾಬು, SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಅಮುದ, ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ, ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

ಡಾ. ಕಾರ್ಲಾಸ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಪ್ರೊ. ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

**ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:**

**ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ,** ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು,ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ),ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ ಎಂ. ಡಿ. ಉಷಾ,** ಉಪ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :**

**ಶ್ರೀ ಶಂಕರೆ ಗೌಡರು,** ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

© KTBS NOT TO BE REPUBLISHED

# ஏழாம்வகுப்பு - தமிழ் முதல்மொழி

## பொருளடக்கம்

N7W4I9

| பாட எண் | பாடத்தின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து<br>( மனப்பாடம் 8 வரிகள் ) | 1 |
| 2. | மொழி வாழ்த்து | 6 |
| 3. | அறவுரைப் பகுதி - திருக்குறள்<br>(மனப்பாடம் -20 வரிகள் ) | 10 |
| 4. | நகைச்சுவை | 17 |
| 5. | பாடுகுயிலே<br>( மனப்பாடம் முதல் 8 வரிகள் ) | 26 |
| 6. | பேச்சுமொழிப் பயன்பாடு | 30 |
| 7. | சர்வக்ஞர்<br>(மனப்பாடம்) 4 வரிகள் | 39 |
| 8. | குழந்தைகளும் இன்றைய கல்வியும் (உரையாடல்) | 45 |
| 9 | நான்மணிக்கடிகை | 55 |
| 10. | வீரமங்கை இராணி அப்பக்கா | 58 |
| 11. | பல்சுவைப் பாடல்கள் | 65 |

NOT TO BE REPUBLISHED @KTBS

M6K7A3

# பாடம் 1
# கடவுள் வாழ்த்து

இயற்கையின் உயிராய் எங்கும்
எழுந்தருள் இறையே போற்றி
செயற்கையின் சிந்தைக்கு எட்டாச்
செல்வமே போற்றி போற்றி
முயற்சியின் விளைவாய் ஓங்கும்
முதன்மையே போற்றி போற்றி
பயிற்சியில் நிற்போர்க் கென்றும்
பண்பு செய் பரனே போற்றி !

**தமிழ்த் தென்றல் - திரு. வி. கல்யாண சுந்தரனார்.**

## பாடல் குறிப்பு :

இறைவன் பேராற்றல் வாய்ந்தவன், அவனே உலகிலுள்ள பொருட்களின் மூலமாக விளங்குகின்றான். அவனைப் போற்றி வணங்கி செயல்களைத் தொடங்குவது தொன்றுதொட்டுப் பின்பற்றப் பெறும் மரபாகும் .

## ஆசிரியர் குறிப்பு :

திருவாரூர் விருதாச்சலனார் மகனார் கல்யாணசுந்தரன் என்பதன் சுருக்கமே திரு. வி. க என்பதாகும். இவர் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ‘ துள்ளம் ’ என்னும் சிற்றூரில் விருத்தாசலனாருக்கும், சின்னம்மாளுக்கும் 26.08.1883 அன்று பிறந்தார். சென்னை வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். நவசக்தி, தேசபக்தன் முதலிய இதழ்களை நடத்தினார். முதன் முதலில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்தார். தமிழ் மொழி வளர்ச்சிக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் உழைத்தார். சமயப் பொதுமை உணர்வுடையவர். பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், இந்தியாவும் விடுதலையும், தமிழ்த் தென்றல், பொதுமைவேட்டல் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் 17.09.1953 அன்று இயற்கை எய்தினார் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**அருஞ் சொற்பொருள் :**

சிந்தை - மனம் ,

பண்பு - குணம் ,

முதன்மை - தலைமை ,

பயிற்சி - பழக்கம் ,

பரன் - எங்கும் நிறைந்த இறைவன் .

**கருத்துரை :**

இயற்கை வளங்கள் தோன்றுவதற்குக் காரணமாய்த் திகழும் இறைவனைப் போற்றுவோம். செயற்கை வளங்கள் உருவாக்கிடும் நம்பிக்கையை மனதில் தோற்றுவிக்கும் இறைவனைப் போற்றுவோம். விடாமுயற்சிகளை ஊக்குவிக்கும் இறைவனைப்போற்றுவோம். பயிற்சி மேற்கொண்டு பலன் பெற நினைப்போருக்கு என்றும் துணைநிற்கும் இறைவனைப் போற்றுவோம் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**பயிற்சி**

**அ. குறுவினா :**

1. இறைவன் எப்படிப் பட்டவன் ?
2. இறைவன் உலகில் எவற்றின் மூலமாக விளங்குகிறான் ?
3. திரு. வி. க. நடத்திய சங்கம் எது ?
4. திரு. வி. க. நடத்திய இதழ்கள் யாவை ?

5. இப்பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது ?

6. திரு. வி. க. விரிவாக்கம் என்ன ?

**ஆ. பெரு வினா :**

1. திரு. வி. க. பற்றி குறிப்பு வரைக ?

2. திரு. வி. க. இறைவனை எங்ஙனம் வாழ்த்துகிறார் ?

**இ. இடம் சுட்டி பொருள் விளக்குக :**

1. முயற்சியின் விளைவாய் ஓங்கும் .

2. பண்புசெய் பரனே போற்றி .

**ஈ. பொருத்தி எழுதுக :**

| | |
|---|---|
| இயற்கை | இறுதி |
| எட்டா | தாழ்ந்த |
| முதன்மை | எட்டும் |
| ஓங்கிய | செயற்கை |

@KTBS NOT TO BE REPUBLISHED

**மொழிப் பயிற்சி**

**உ. பிரித்து எழுதுக :**

எழுந்தருள் -

நிற்போர் -

பண்புசெய் -

பணியாற்றினார் -

**ஊ. எதிர்ச் சொல் தருக :**

முயற்சி ×

செய் ×

போற்று ×

செல்வந்தர் ×

**எ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

பேராற்றல், இறைவன், பண்பு, செல்வம் .

**ஏ. கீழ்க்கண்டவற்றில் பிழைகளை திருத்துக :**

எழுந்தவள், விலைவாய், பயிர்சி, இரையே போட்றி .

**ஐ. செயல்பாடுகள்**

**1. எடுத்துக் காட்டைப் போல் மற்ற சொற்களை மாற்றி எழுதுக :**

(எ-க) போற்றி - போற்றிடு

இயங்கு - __________

காட்டு - __________

மாற்று - __________

**2. இறைவனைப் பொதுவாகச் சுட்டும் வேறு சொற்கள் சிலவற்றை எழுதுக :**

**3. முன் வகுப்புகளில் நீ படித்த வாழ்த்துப் பாடல்களை நினைவு படுத்திக் கூறுக :**

@KTBS NOT TO BE REPUBLISHED

**4. பாடி மகிழ் :**

முற்றும் தெரிந்தார் ஈங்கில்லை
முறையே கற்பதுவே கல்வி !
" தன்னைக் காட்டிலும் புகழ்பெற்றே
தழைத்திட வேண்டும் தன்னிடத்தில்
வித்தை கற்கும் மாணாக்கன் "
என்றே விரும்பும் ஆசிரியர்
உடலின் நோயை மருந்த கற்றும்
உண்மையறிவாய் ! அது போல
மன நோயைக் கரைக்கும் கல்வி மருந்தாகும் !
ஆகையினாலே கல்வி தரும்
ஆசான் உயர்ந்த மருத்துவனாம்
நீ கை தொழுதே மன மகிழ்வாய் !
நிறைவாய்க் கல்வி தந்தவரை !

✤ ✤ ✤

@KTBS
NOT TO BE REPUBLISHED

H8A9X3

# பாடம் 2

# மொழி வாழ்த்து



காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க !

- சுத்தானந்த பாரதியார் .

@KTBS NOT TO BE REPUBLISHED

## பாடல் குறிப்பு :

சுத்தானந்த பாரதியாரின் பாடல்கள் தமிழர்களுக்குப் புதிய உயிர் அளிப்பன, அவரது பாடல்களெல்லாம் மேலான தேசபக்தியையும், தெய்வபக்தியையும் உண்மையான கவிகள் விளைக்கும் ஒப்பற்ற இன்பத்தையும் விளைவிக்கின்றன. ஐம்பெருங் காப்பியங்களையும், திருக்குறள் நூலையும் தமிழன்னை அணிந்தும், ஏந்தியும் உள்ளாள் என இந்நூல் விளக்குகிறது .

## ஆசிரியர் குறிப்பு :

இப்பாடலை இயற்றியவர் சுத்தானந்த பாரதியார். இவர் 1897 - ம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். கவியோகி மகரிஷி எனப் போற்றப்பட்டார். துடிப்புள்ள பாடல்களைப் பாடியுள்ளார். பல மொழிகளைக் கற்றுப் பலதுறை அறிவை வளர்த்துக் கொண்டார். கவிதைகள், இசைப்பாடல்கள், உரைநடை நூல்கள் எனப் பல நூல்களை இயற்றியுள்ளார். தமிழ்த் திருப்பாவை, பாரத சக்தி மகா காவியம் ஆகியவை இவர் இயற்றியவையே .

**அருஞ் சொற் பொருள் :**

ஒளிரும் - ஒளி வீசும், குண்டலம் - காதணி, சிந்தாமணி - மார்பில் அணியும் அணி, மேகலை - இடுப்பில் அணியும் அணி, சிலம்பு - காலணி, போது - மலர், பூ - பொலிவு, தாள் - பாதம், சூளாமணி - தலையணி, தமிழ் - தமிழரசி .

**கருத்துரை :**

காதுகளில் ஒளி வீசுகின்ற குண்டலமாகக் குண்டலகேசியும், வளையலாக வளையாபதியையும் மார்பில் அணியும் மாலையாக சீவக சிந்தாமணியையும் இடையில் மேகலையாக மணிமேகலையும் ஒலிக்கின்ற சிலம்பாக சிலப்பதிகாரத்தையும் தலையணியாக சூளாமணியையும் அணிந்து நீதி விளங்கும் திருக்குறளைச் செங்கோலாகக் கையில் ஏந்தியுள்ள தமிழரசி நீடு வாழ்க !

@KTBS NOT TO BE REPUBLISHED

**பயிற்சி**

**அ. குறு வினா :**

1. வளையாபதி நூலைத் தமிழரசி எங்கு அணிந்துள்ளாள் ?
2. தமிழரசியின் மேகலையாக விளங்குவது எது ?
3. தமிழரசி எதனைத் தன் முடியில் சூடியுள்ளாள் ?
4. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை ?
5. சுத்தானந்த பாரதியார் இயற்றிய நூல்கள் யாவை ?
6. சுத்தானந்த பாரதியார் மக்களால் எவ்வாறு போற்றப்பட்டார் ?

**ஆ. பெரு வினா :**

1. சுத்தானந்த பாரதியார் தமிழன்னையை எவ்வாறு வாழ்த்தியுள்ளார்?,

இ. **கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. சுத்தானந்த பாரதியார் ____________ ஆம் ஆண்டு __________ ல் பிறந்தார்
2. தமிழரசியின் காதில் ஒளிர்வது _________________ .
3. தமிழரசியின் _____________ விளங்குவது திருக்குறள் .

ஈ. **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1. மார்பணி | - | சிலம்பு |
| 2. காதணி | - | சூளாமணி |
| 3. இடையணி | - | வளை |
| 4. காலணி | - | குண்டலம் |
| 5. முடியணி | - | சிந்தாமணி |
| 6. கையணி | - | மேகலை . |

**மொழிப் பயிற்சி**

உ. **பிரித்து எழுதுக :**

காதொளிரும் , தாளிணை , நீதியொளிர் , தமிழரசி .

ஊ. **சேர்த்து எழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| மென்மை | + | இடை | = | |
| சிலம்பு | + | ஆர் | = | |
| போது | + | ஒளிர் | = | |
| ஏந்தி | + | உள்ள | = | |

எ. **எதிர்ச் சொல் தருக :**

செங்கோல் ×

நீதி ×

இன்பம் ×

@KTBS NOT TO BE REPUBLISHED

ஏ. **ஒலிநயச் சொற்களை எழுதுக :**

(உ.ம்)

| | | |
|---|---|---|
| கலை | வலை | தலை |
| நீடு | _____ | _____ |
| சூடி | _____ | _____ |
| பதி | _____ | _____ |

ஐ. **செயல்பாடுகள்**

இச் செய்யுளில் ஆசிரியர் தமிழரசியை 'நீடுவாழ்க' என வாழ்த்தியுள்ளார், இதைப் போல பிறரை வாழ்த்தும் சொற்களை எழுதுக :

1. __________
2. __________
3. __________
4. __________

❊ ❊ ❊

@KTBS
NOT TO BE REPUBLISHED

D4S6L3

# பாடம் 3

# 1. அறவுரைப் பகுதி

## திருக்குறள்



@KTBS NOT TO BE REPUBLISHED

### அறிவுடைமை ( அதிகாரம் 43 )

1. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு . 423

2. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் . 428

### குறிப்பறிதல் ( அதிகாரம் 71 )

3. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் . 706

4. பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் . 709

## நட்பாராய்தல் ( அதிகாரம் 80 )

5. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல் வேண்டும்நட்பு . 794

6. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அருங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும் . 799

## உட்பகை ( அதிகாரம் 89 )

7. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக 882
கள்போல் பகைவர் தொடர்பு .

8. உடன்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று . 890

©KTBS NOT TO BE REPUBLISHED

## பண்புடைமை ( அதிகாரம் 100 )

9. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் . 996

10. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர் . 997

### அ. அருஞ்சொற் பொருள் :

மெய்ப்பொருள் - உண்மைப் பொருள், பேதைமை - அறியாமை, பளிங்கு போல் - கண்ணாடி போல், கடுத்தது - வெறுப்பு , கேண்மை - நட்பு, வகைமை - குறிப்பு , குடங்கருள் - குடிசைக்குள் , அற்று - போன்ற , கள் போல் - சொந்தம் போல் , அஞ்சற்க - பயப்பட வேண்டாம் , பண்புடையார் - நல்ல குணம் கொண்டவர்கள் , மண்புக்கு - மண்ணுக்கு , கெடுங்காலை - துன்பக்காலம் , உள்ளினும் - நினைத்தாலும் .

### ஆ.நூல் குறிப்பு :

**பெயர்க் காரணம்** : திருக்குறள் - திரு + குறள், மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூல்; ஆதலின் இப்பெயர் பெற்றது. குறள் - இரண்டடி வெண்பா .

**பெருமை :** இந்நூல் தமிழில் உள்ள நூல்களுள் முதன்மையானது. சில சொற்களால் மட்டுமே சிறந்த கருத்துக்கைள எடுத்துக் கூறுவது. இது சாதி, மத, சமய வேற்றுமை இல்லாமல் உலக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க பொதுவான நீதிகளைக் கூறுவது. அதனால் ‘ உலகப் பொதுமறை ’ எனப் போற்றப் படுகிறது. எல்லாக் காலத்துக்கும் ஏற்ற கருத்துகளைக் கூறுவது. அதனால், இது காலத்தை வென்ற நூலாகவும் விளங்குகிறது .

‘ ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாளும் இரண்டும் சொல்லுக்குறுதி ’

என்னும் பழமொழி இந்நூலின் பெருமையை விளக்குவதாகும். ‘எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால் ’ என்று பாராட்டப்படும் பெருமையுடையது. இந்நூல் உலக மொழிகள் பலவற்றுள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது .

**நூலின் அமைப்பு :** திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்துள்ளது. அதனால் முப்பால் என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இதன் உட்பிரிவுகளுக்கு அதிகாரம் என்று பெயர். இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு பத்து பாடல்களாய் 1330 பாடல்கள் உள்ளன .

©KTBS NOT TO BE REPUBLISHED

## இ. ஆசிரியர் குறிப்பு :

பெயர் : திருவள்ளுவர்

பெற்றோர் : ஆதி பகவன் என்பர்

ஊர் : சென்னையிலுள்ள மயிலாப்பூர்

காலம் : கி.மு. 31

திருவள்ளுவர் வரலாறு தெளிவாய்த் தெரியவில்லை. இவர் வாசுகி என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்தினார் என்பர். நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தார் என்றும் கூறுவர் .

இவருக்குத் தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்று பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இச் சிறப்புப் பெயர்களால் இவரது புலமைச் சிறப்பு விளங்கும். சென்னையில் உள்ள மயிலாப்பூரில் வள்ளுவருக்குக் கோயில் உள்ளது. நுங்கம் பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம் வள்ளுவர் பெருமையை விளக்கும் அழியாத நினைவுச் சின்னமாய் விளங்குகிறது .

**ஈ. கருத்துரை :**

**அறிவுடைமை**

1. எத்தனை பேர் என்னென்ன சொன்னாலும் அச்செய்திகளில் உண்மை உள்ளதா, என தீர விசாரித்து அறிந்து கொள்வதே அறிவு.

2. பயப்பட வேண்டியதற்குப் பயப்படாமல் இருப்பது மூடத்தனம் பயப்படவேண்டியதற்குப் பயப்படுவது அறிவாளிகளின் செயல் .

**குறிப்பறிதல்**

3. தம் எதிரே உள்ள பொருளைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடி போல், ஒருவன் மனத்தில் உள்ள கருத்துக்களை அவனுடைய முகம் தெளிவாகக் காட்டும் .

4. கண்களின் குறிப்புகளை உணரும் திறமையுடையவர்களைப் பெற்றால் பகைவன் யார், நண்பன் யார் என்பதை அவர் கண்களே சொல்லி விடும் .

**நட்பாராய்தல்**

5. உயர்ந்த குடியில் பிறந்து தான் செய்த தவறுக்காக வருந்துபவரை அவர் விரும்பும் பொருளைக் கொடுத்தாவது நட்பு கொள்ள வேண்டும் .

6. துன்பம் வந்த காலங்களில் நம்மை விட்டு ஒதுங்குபவரின் நட்பை எமன் வந்து கொல்லும் நேரத்தில் நினைத்தாலும் உள்ளம் சுடும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

## உட்பகை

7. வாள்போன்ற கொடுமையான குணமுடைய எதிரிகளை கண்டு பயப்பட வேண்டியதில்லை, ஆனால் சொந்தம் போல் காட்டி கெட்ட குணம் கொண்டவரிடம் தொடர்பு கொள்ளப் பயப்பட வேண்டும் .

8. மனத்துடன் ஒத்துப்போகும் குணம் இல்லாதவருடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிசைக்குள் பாம்போடு கூடி வாழ்வது போன்றதாகும் .

## பண்புடைமை

9. நற்குணங்கள் உடையவர்களைப் பெற்றிருப்பதால் தான் இந்த உலகம் நிலைத்திருக்கிறது. அது இல்லையானால் மண்ணோடு மண்ணாக அழிந்துவிடும் .

10. மனிதர்களுக்கு இருக்கவேண்டிய குணங்கள் இல்லாதவர், அரத்தைப் போல கூர்மையான அறிவையுடையவராக இருந்தாலும், ஓரறிவு உள்ள மரத்தைப் போன்றவரே ஆவர் .

## பயிற்சி

**உ. சேர்த்தெழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அறம் | + | பால் | = |
| 2. | மொழியில் | + | உள்ள | = |
| 3. | என்ன | + | என்ன | = |
| 4. | அந்த | + | செய்திகள் | = |
| 5. | நல்ல | + | குணங்கள் | = |
| 6. | இல்லை | + | ஆனால் | = |
| 7. | அறிவு | + | உடைமை | = |
| 8. | குறிப்பு | + | அறிதல் | = |
| 9. | பண்பு | + | உடைமை | = |

©KTBS NOT TO BE REPUBLISHED

**ஊ. பிரித்தெழுதுக :**

1. திருக்குறள் =
2. வாழ்வியல் =
3. முதன்மையானது =
4. சொல்லருமை =
5. பழமொழிகள் =
6. திறமையுடையவர்கள் =
7. குணமில்லாதவர் =
8. நிலைத்திருக்கிறது =
9. நட்பாராய்தல் =

**எ. எதிர்ச்சொல் தருக :**

1. மெய் ×
2. ஞானம் ×
3. தெளிவாக ×
4. பகைவன் ×
5. அஞ்சுதல் ×
6. உயர்ந்த ×
7. நட்பு ×
8. தவறு ×
9. துன்பம் ×
10. கூடி ×
11. தொடர்பு ×
12. ஓரறிவு ×

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஏ. குறு வினாக்கள் :

1. திருக்குறளை இயற்றியவர் யார் ?
2. திருக்குறள் - பொருள் கூறுக ?
3. திருக்குறள் எவ்வாறு போற்றப்படுகிறது ?
4. திருக்குறள் காலத்தை வென்ற நூல் எனக் கூறப்படுவதேன் ?
5. திருக்குறள் எத்தனை பெரும் பிரிவுகளைக் கொண்டது ? அவை யாவை ?
6. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை ?
7. திருக்குறளில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன ?
8. திருவள்ளுவரது காலம் எது ?
9. திருவள்ளுவர் வேறு எப்பெயர்களால் குறிப்பிடப்படுகிறார் ?

ஐ. விழுமிய கல்வி :

துன்பம் வரும் காலங்களில் நண்பனை விட்டு விலகாமல் தனக்கு வந்த துன்பம் போல் நினைத்து உதவி செய்வது தான் உண்மையான நட்பு - என்பதை வலியுறுத்துதல் .

❊ ❊ ❊

@KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 4

# நகைச்சுவை

K5V6T6

சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என்று பாடினார் புலமைப் பித்தன் என்ற கவிஞர். சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருட்டே ஆகும் என்று திருவள்ளுவர் கூறினார். சிரிப்பு இல்லாத வாழ்க்கை உப்பில்லாத உணவு போல் சுவைக்காது. பொன்னாலான நகை என்பது அணிந்து கொள்ளுவதற்கு மட்டும் தான். நவரசங்களில் ஒன்றான நகை என்பது மனநோய்க்கும் மருந்து. தம் கருத்தை இரு பொருள் படக்கூறிப் பிறரை மகிழவைப்பது சிலருக்குக் கைவந்தக் கலை. அதைக் கேட்டு ரசிப்பதும், போற்றுவதும் மற்றொரு கலை. இதற்கு எடுத்துக் காட்டாக சிலவற்றைக் கீழே காண்போம் .



1. ஆன்மிகச் செல்வர் கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றும் போது நகைச்சுவையாகப் பேசுவதையும் கேள்விகள் கேட்டுத் தகுந்த பதில் அளிப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பதையும் வாடிக்கையாகக் கொண்டவர். ஒரு முறை " முருகனின் பெருமை " பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். அப்போது ஒரு சிறுவனைப் பார்த்து, " தம்பி . . . முருகனின் தந்தை யார் ? " எனக் கேட்டார். அச்சிறுவன் முந்திய நாள் ‘திருவிளையாடல்’ படம் பார்த்திருந்தான். அந்த நினைவோடு " சிவாஜி " எனக் கூறினான். அப்படத்தில் சிவாஜி கணேசன், சிவ பெருமானாக நடித்திருந்தார். சிறுவன் கூறிய பதிலைக் கேட்டதும் அனைவரும் ‘ கொல் ’ என்று சிரித்தனர் .

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆனால் வாரியார் அவனை அழைத்து இவன் இக்காலத்திய பண்பாட்டோடு பதில் கூறியிருக்கிறான். நாம் காந்தியை ‘ காந்திஜி ’ என்றும் நேருவை ‘ நேருஜி ’ என்றும் கூறுவது போல் சிவனை ‘ சிவாஜி ’ என்று கூறினான் என்றார். அனைவரும் அவர் பேச்சில் இருந்த நயத்துடன் கூடிய நகைச்சுவையை உணர்ந்து சிரித்தனர்.



© KTBS NOT TO BE REPUBLISHED

2. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தமிழ்ப்புலமை பெற்றவர். ஒரு நாள் அவருக்கு ஒரு செல்வந்தர் வீட்டிலிருந்து விருந்துக்கு அழைப்பு வந்தது. பண்டிதர் விருந்துக்குச் செல்ல ஆடைகளை அணிந்தார். ஆடை சில இடங்களில் கிழிந்து இருந்தது. " ஆள்பாதி ஆடைபாதி " என்பதைப் புலவர் மறந்தார். அப்படியே சென்றார். விருந்துக்குச் சென்ற வீட்டு வாயிலில் நின்ற காவலர், அவர் ஆடையைக் கண்டவுடன் உள்ளே அனுமதிக்கவில்லை. பண்டிதமணி கதிரேசன் செட்டியார், தன்னை விருந்துக்கு அழைத்ததாகக் கூறி எவ்வளவு போராடியும் அவரை உள்ளே போக விடவில்லை .

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தம் வீட்டிற்குத் திரும்பினார். வண்ண வண்ண ஆடைகளை உடுத்திக் கொண்டு வந்தார். சட்டை கண்ணைக் கவரும் வகையில் பளபள என்று இருந்தது. காவலன் அவரை ‘ வருக வருக ’ என வரவேற்றான்.



கதிரேசன் செட்டியார் உள்ளே சென்று அனைவருக்கும் நடுவில் உட்கார்ந்தார். இலையில் பரிமாறிய இனிப்பை எடுத்து " ஆடையே சாப்பிடு " என்று உரத்த குரலில் கூறினார். எல்லோரும் ஆடை எங்கேயாவது சாப்பிடுமா? என்று நகைத்தனர். கதிரேசன் செட்டியார் நடந்ததைக் கூறினார். முதலில் பழைய ஆடையை அணிந்து வந்தேன். என்னை உள்ளே விடவில்லை. பளப்பளப்பான சட்டையை அணிந்து வந்த பிறகு விருந்தில் இடம் கிடைத்தது . விருந்து ஆடைக்கா ? ஆளுக்கா? என்று கேட்டார். அவருடைய நகைச்சுவை கலந்த பேச்சைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

3. காளமேகப் புலவர் ஒரு முறை நாகைப் பட்டினத்திற்குச் சென்றார். நாகைக் காரோண நாதரைத் தரிசித்து விட்டு வருகையில் பசித்துன்பம் மேலிட களைப்புற்றார். நடை தளர்ந்தது, பசியால் மெய் சோர, நாவுலர உணவு விடுதியைத் தேடினார். தெருவின் ஒரு பக்கத்தே சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களை அணுகி " சோறு எங்கே விக்கும் " என்று கேட்டார். அதற்கு அப்பிள்ளைகள் " சோறு தொண்டைக் குழியில் விக்கும் " என்றுரைத்து நகையாடினர். புலவருக்கோ

NOT TO BE REPUBLISHED @KTBS

கோபம் பொங்கியது. பசியொரு புறம், மானம் மற்றொரு புறம் வருத்தின. ஆனாலும் விளையாடும் பாலகர்களுக்கு ' சோறு தொண்டைக் குழியிலும் விக்கும், உணவு விடுதியிலும் விக்கும் ' என இரு பொருள்பட நகைச் சுவையாகக் கூறினார். பாலகர்கள் வியப்பில் ஆழ்ந்தனர் .



இது போன்ற நல்ல நகைச்சுவைத் துணுக்குகளைப் படித்து நீங்களும் மகிழ வேண்டும், மற்றவர்களையும் மகிழ்விக்க வேண்டும் .

**அருஞ்சொற் பொருள் :**

களைப்பு - சோர்வு

வியப்பு - ஆச்சரியம்

மெய் - உடல்

அணுகி - அருகில் சென்று

உரத்த - ஒலி மிகுந்த

வண்ணம் - நிறம்

கண்ணைக் கவரும் - கண்ணுக்கு விருந்தாகும்

ஆள் பாதி ஆடை பாதி - ஒருவனின் மதிப்பு அவருடைய உருவத்தால் மட்டும் ஏற்படுவதில்லை. அவர் அணியும் ஆடையாலும் ஏற்படுகிறது , எனவே ஆள்பாதி ஆடை பாதி என்னும் பழமொழி தோன்றிற்று .

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**அ. குறு வினா :**

1. மன நோய்க்கு மருந்து எது ?
2. சிறுவன் கண்ட படத்தின் பெயர் என்ன ?
3. பண்டிதமணி கதிரேசனுக்கு எங்கிருந்து அழைப்பு வந்தது ?
4. காவலர் பண்டிதமணி கதிரேசனை ஏன் விருந்துக்கு அனுமதிக்கவில்லை ?
5. காளமேகப் புலவர் எதைத் தேடிச் சென்றார் ?

**ஆ. சிறு வினா :**

1. கிருபானந்த வாரியார் சிறுவனிடம் கேட்ட கேள்வி யாது ? அதற்கு சிறுவன் அளித்த பதில் என்ன ?
2. கிருபானந்த வாரியார் பேச்சில் இருந்த நயத்துடன் கூடிய நகைச்சுவையை விளக்குக ?
3. ‘ ஆள் பாதி ஆடை பாதி ’ - விளக்குக .
4. காளமேகப் புலவர் பிள்ளைகளை எவ்வாறு வியப்பில் ஆழ்த்தினார் ?

**மொழிப் பயிற்சி**

**இ. பிரித்து எழுதுக :**

உப்பில்லாத , கைவந்த , நகைச்சுவை ,

நடித்திருந்தார் , அனுமதிக்கவில்லை .

@KTBS NOT TO BE REPUBLISHED

**ஈ. சேர்த்து எழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| நா | + | உலர | = | |
| கண்ணை | + | கவரும் | = | |
| சொல் | + | பொழிவு | = | |
| பளபளப்பு | + | ஆன | = | |
| நகை | + | ஆடினார் | = | |

**உ. எதிர்ச் சொல் தருக :**

சிரிப்பு ×

இனிப்பு ×

உள்ளே ×

செல்வர் ×

பழைய ×

**ஊ. வாக்கியத்தில் அமைக்க :**

சொற்பொழிவு , மகிழவைப்பது , விருந்து , கண்ணைக் கவரும்.

**எ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருட்டே ஆகும் எனக் கூறியவர் ____________

   ( பண்டிதமணி , திருவள்ளுவர் , கிருபானந்த வாரியார் )

2. சிரிப்பு இல்லாத வாழ்க்கை ______________ இல்லாத உணவு .

   ( இனிப்பு , உப்பு , கசப்பு )

3. காளமேகப் புலவர் ஒரு முறை _______ பட்டினத்திற்குச் சென்றார்.

   ( சென்னை , நாகை , பெரிய )

@KTBS
NOT TO BE REPUBLISHED

4. பண்டிதமணி கதிரேசன் ____________ சட்டை அணிந்ததால் வரவேற்கப்பட்டார் .

( பளபளப்பான , கிழிந்த , துவைத்த )

**ஏ. இடம் சுட்டி விளக்குக :**

1. " தம்பி . . . . . முருகனின் தந்தை யார் " ?
2. " ஆடையே சாப்பிடு "

**ஐ. இப்பாடலில் வந்துள்ள ஒலி நயமிக்க சொற்களைப் போல வேறு சொற்களை எழுதுக :**

சிரிப்பு ____________ ____________

நகை ____________ ____________

கிழிந்து ____________ ____________

ஆடை ____________ ____________

**ஒ. செயல்பாடு :**

1. கை வந்த கலை - இது ஒரு மரபுத் தொடர் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் எனப்படும். இது போன்று வேறு தொடர்புகளை எழுதுக.

   (எ.க) கை கொடு __________ __________ __________

2. இரண்டு பொருள் தருகின்ற சொற்களை தொகுத்து எழுதுக ;
3. சிரிப்பு சார்ந்த பழமொழிகளை எழுதுக ;

   சிரிப்பின் ஒலிகளை எழுதுக ; சிரித்துக் காட்டுக ; சிரிப்பு குழுவிற்குச் சென்று உரையாடுக . ( laughing day jan $10^{th}$ )

4. உனக்குத் தெரிந்த நகைச்சுவை காட்சியைக் கூறுக .

**ஓ. படித்து அறிக :**

**நவரசம் :** நகை , அழுகை , வெகுளி , இளிவரல் , மருட்கை , அச்சம், பெருமிதம், உவகையுடன் சாந்தம் - 9 மெய்பாடுகள் ஆகும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**நவமணிகள் :** வைரம் , முத்து , மரகதம் , மாணிக்கம் , நீலம் , புட்பராகம், வைடூரியம் , கோமேதகம் , பவளம் .

**நவதானியங்கள் :** நெல் , கோதுமை , கேழ்வரகு , சோளம் , கடலை , உளுந்து , பயிறு , மொச்சை , துவரம் .

**நவகிரகங்கள் :** சூரியன் , சந்திரன் , செவ்வாய் , புதன் , குரு , சுக்கிரன், சனி , ராகு , கேது .

இப்பாடத்தில் ' வருக வருக ' என்று ஒரு சொல்லே இரண்டு முறை அடுக்கி வந்துள்ளது. இவ்வாறு வருவது அடுக்குத் தொடராகும். இதே போல் இங்கு வந்துள்ள தொடர்களை எடுத்து எழுதுக. உங்களுக்குத் தெரிந்த வேறு தொடர்களையும் எழுதுக :

**மொழிப்பயிற்சி**

**2. பேச்சு வழக்குச் சொற்கள் திருந்திய சொற்கள்**

1. மூஞ்சி கழுவு -
2. அஞ்சி ரூபாய் குடு -
3. மாங்கா பழம் வேணுமா ? -
4. நேத்து ஸ்கூல் போனியா ? -

**3. பாடிப்பழகுக :**

**சிக்கனம்**

பேரோடும் புகழோடும் வாழ் வதற்குப்
பேரறிவே துணைபுரியும்; நாமெல் லோரும்
சீரோடும் சிறப்போடும் வாழ்வ தற்குச்
சிக்கனமே துணைபுரியும்; பகட்டு வாழ்க்கை
நீராவி போன்றதுவாம்; சிக்கனந்தான்
நீரூற்றைப் போன்றதுவாம்; சிக்கனத்தை
வேரோடு பெயர்த் தெறிந்து வறுமையுற்று
விக்கி விக்கி அழுதவர்கள் பலபே ருண்டு .

@KTBS
NOT TO BE REPUBLISHED

தாராள மனப்பான்மை என்று சொல்லித்
　　தண்ணீர் போல் பணத்தையெல்லாம் செலவு செய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம்; வாழ்வில்
　　சிக்கனந்தான் ஒருவனுக்கு சிறந்த சொத்தாம்
சீராகச் செட்டாக ஒவ்வோர் நாளும்
　　சிக்கனமாய்ப் பெரியோர்போல் வாழ்ந்து வந்தால்
பாராங்கல் மீதில் விழும் மழைநீர் போலப்
　　பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும் .

**- கவிஞர் சுரதா.**

**குறியீடுகளை அறிக :**

1. ஒரு சொற்றொடரில் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடும் குறி [ . ] முற்றுப்புள்ளி .

2. ஒரு தொடரில் பொருள்கள் பல தொடர்ந்து வரும் போது இடப்படும் குறி [ , ] காற்புள்ளி .

3. ஒரு சொற்றொடரில் ஓர் எழுவாய், பல பயனிலைகளைப் பெற்றுவரும் போது சொற்றொடர்களின் ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் இடம்பெறும் குறி [ ; ] அரைப்புள்ளி .

4. வினாப்பொருளைத் தரும் சொற்றொடரின் இறுதியில் இடம்பெறும்குறி [ ? ] வினாக்குறி .

5. வியப்புப்பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடப்பெறும் குறி [ ! ] வியப்புக் குறி .

6. பழமொழி / எடுத்துக்காட்டு நிகழ்ச்சிகள் / ஒருவரின் கூற்று ஆகியவற்றை எடுத்தாளும் போது சொற்றொடர்களின்தொடக்கத்தின் மேற்பகுதியிலும் முடிவின் மேற்பகுதியிலும் இடம்பெறும் குறியீடு ‘ ’ ஒற்றை மேற்கோள்குறி .

7. உரையாடலின் போது ஒருவரின் நேர்க்கூற்றாக வருவதைக் குறிக்க இடும்குறி [ “” ] இரட்டை மேற்கோள் குறி .

NOT TO BE REPUBLISHED ©KTBS

# பாடம் 5

## பாடு குயிலே !

X2H1I2

புள்ளி சிறகடித்துப் பாடுகுயிலே ! - தமிழன்
புதிது பிறந்தானென்று பாடுகுயிலே !
வெள்ளிக் குரலெடுத்துப் பாடுகுயிலே ! - எங்கள்
விடுதலை வந்ததென்று பாடுகுயிலே !

நேற்றுவரை உலகில் அஞ்சி நடந்தோம் !
நீட்டும் எறும்புகளை உண்டு கிடந்தோம் !
காற்றுத் திரும்பியது கண்டு மகிழ்ந்தோம் - ஒரு
கவிதை பிறந்ததென்று பாடுகுயிலே !

NOT TO BE REPUBLISHED @KTBS

சாதிப் பிரிவினைக்குச் சாட்டை கொடுத்தோம் - தமிழ்ச்
சாதிக்கு மட்டும் இந்த நாட்டைக் கொடுத்தோம் !
வீதிக்குவீதி மொழி வேட்கை படைத்தோம் - விடி
வெள்ளி முளைத்ததென்று பாடுகுயிலே !

**- உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்**





## ஆசிரியர் குறிப்பு :

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தமிழ் ஈழத்தில் ‘ தேனாடு ’ என்று அழைக்கப்படும் மட்டக் களப்பில் நாவற்குடா என்னும் சிற்றூரில் 4 . 4 . 1938 ல் காத்த முத்து - அழகம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் .

சிறு வயதிலேயே தமிழுணர்ச்சி கவிஞர் நெஞ்சில் பூத்தாடிற்று. முதல் கவிதையை அவர் பாடியபோது பன்னிரண்டு வயது சிறுவனாக இருந்தார். பெரியார், அண்ணா ஆகியோ எழுத்துக்கள், சிந்தனைகள் கவிஞரைச் சிறு வயதில் பெரிய சிந்தனையாளர் ஆக்கிற்று .

உணர்ச்சிக் கவிஞர் 1959 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பட்டப் படிப்புக்காக தங்கினார் .

நாம் தமிழர் இயக்கத் தந்தை சி. பா. ஆதித்தனார் ‘ உணர்ச்சி கவிஞர்’ என்ற பட்டத்தை இவருக்கு வழங்கிப் பாராட்டினார் .

1979 ஆம் ஆண்டு கவிஞர் சரோஜினி தேவியாரை திருமணம் செய்து கொண்டார். தமிழ் ஈழம் அவரை ஈன்றது. தமிழ்நாடு அவரை தமிழ் ஊட்டி வளர்த்தது ; தமிழ் உலகம் அவரை பயன் கொள்கிறது .

@KTBS NOT TO BE REPUBLISHED

## அருஞ்சொற் பொருள் :

புள் - பறவை; சிறகு - இறக்கை; அஞ்சி - பயந்து; வேட்கை - தாகம். விருப்பம்; விடிவெள்ளி - காலையில் உதிக்கும் ஒரு நட்சத்திரம்; ஈழம் - ஒரு நாடு .

### பயிற்சி

### பொருளுணர் திறன் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக :**

1. மட்டக் களப்பில் ____________ என்னும் சிற்றூரில் கவிஞர் காசி ஆனந்தன் பிறந்தார் .
2. முதல் கவிதையை கவிஞர் தனது _________ வது வயதில் பாடினார்.
3. நேற்றுவரை தமிழன் உலகில் _______________ நடந்தான் .
4. சாதிப் பிரிவினைக்கு _______________ கொடுத்தோம் .
5. வீதிக்கு வீதி ________________ வேட்கை படைத்தோம் .

**ஆ. கீழ் உள்ள சொற்களையும் பொருள்களையும் பொருத்துக .**

புள் - பயந்து

சிறகு - விருப்பம்

அஞ்சி - பறவை

வேட்கை - இறக்கை

**இ. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை தருக :**

1. காசி ஆனந்தனுக்கு ‘ உணர்ச்சிக் கவிஞர் ’ என பட்டம் கிடைக்க காரணம் என்ன ?
2. கவிஞர் பெரிய சிந்தனையாளர் ஆகக் காரணம் என்ன ?
3. சி. பா. ஆதித்தனார் யார் ? அவர் என்ன செய்தார் ?
4. தமிழன் புதிதாக பிறந்தான் என குயில் ஏன் பாட வேண்டும் ?

**ஈ. பெரு வினா :**

1. குயில் எவ்வாறெல்லாம் பாட வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார் ?
2. இப்பாடலின் திரண்ட கருத்தை எழுதுக ?

**உ. இப்பாடலில் உள்ள ஒலி நயச்சொற்களை எடுத்து எழுதுக ?**

**ஊ. எதிர்ச்சொல் தருக :**

புதிது ×

விடுதலை ×

நீட்டு ×

அஞ்சி ×

**எ. பிரித்து எழுதுக :**

சிறகடித்து =

குரலெடுத்து =

பிறந்ததென்று =

வீதிக்கு வீதி =

@KTBS NOT TO BE REPUBLISHED

ஏ. செயல்பாடு :

1. குயில் பற்றிய வேறு பாடல்களை அறிந்து பாடுக .
2. பறவையினங்களின் படங்களை சேகரித்து ஒட்டி பெயர்களை எழுதுக .
3. கோடை காலத்தில் பறவை இனங்கள் சரணாலயத்தை மாற்றுவது ஏன் ?

**வாழ்க்கைத் திறன்கள் :**

**நீங்கள் எப்படி நடந்துக் கொள்வீர்கள் ?**

**1. நீங்கள் பள்ளிக்குச் செல்லும் போது பறவை ஒன்று அடிப்பட்டு கீழே விழுந்து விட்டது. நீங்கள் அப்பறவையை எவ்வாறு காப்பாற்றுவீர்கள் ?**

அ. பார்க்காமல் சென்று விடுவேன் .

ஆ. பறவையை எடுத்து அடிப்பட்ட இடத்தில் மருந்து போட்டு அதற்கு உதவிசெய்வேன் .

இ. பறவையை எடுத்து ஓரமாக வைத்து விடுவேன் .

விடை : ________

**விழுமியக் கல்வி :**

பறவைகளிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் வேண்டும்



@KTBS NOT TO BE REPUBLISHED

❊ ❊ ❊

G2D3H6

# பாடம் 6
# பேச்சு மொழிப் பயன்பாடு

மொழி, மக்களால் படைக்கப்பட்ட ஒரு தகவல் தொடர்புக் கருவி. ஒரு மொழி மக்களின் அறிவை வளர்த்து, அவர்களை உயர்த்தும் ஒரு சிறந்த கருவியாகும். மக்கள் ஒன்றாய்க் கூடி வாழ்வதற்குச் சிறந்த கருவி மொழியேயாகும். ஆகவே ஒருவன் தன் உணர்வை வெளிப்படுத்தவும் செய்தியைப் பிறருக்கு எடுத்துக்கூறவும் மொழி பெருந்துணை புரிகின்றது. மொழி ஒரு சமுதாயத்தின் கடந்த காலத்துப் பதிவாகவும், நிகழ்காலத்து நினைவாகவும், எதிர்காலத்துக் கனவாகவும் அமைகிறது. தமிழ் மொழியைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்துவது பற்றிய அடிப்படை விதிகளையே பயன்பாட்டுத் தமிழ் என்கிறோம் .

மனிதர்கள் பேசும் மொழியில் அமைந்துள்ள ஒலிகள் பேச்சு உறுப்புகளின் மொழியாய்ப் பிறக்கின்றன. ஒவ்வொரு மனித சமுதாயமும் தங்களுக்கு ஏற்றவாறு ஒலி வடிவங்களையும், வரி வடிவங்களையும் அமைத்துக் கொண்டுள்ளன. மக்கள் நாகரிக வாழ்வின் ஒளி விளக்காகத் திகழும் கருவி மொழி என்பதும் நாம் உணரவேண்டிய கருத்தாகும் .

மொழியினைப் பேச்சுமொழி எனவும், எழுத்துமொழி எனவும் வகைப்படுத்துவர். பேச்சுமொழி உள்ளத்து உணர்ச்சிகளின் தூண்டுதலால் இயல்பாகவே வருவதாகும். எழுத்துமொழி, பேச்சுமொழியை அடிப்படையாகக் கொண்டு செம்மைப்படுத்தப்பட்டதாகும் .

மொழிக் கல்வி என்பது மொழியைக் கற்பிப்பது, மொழியில் அமைந்த இலக்கியங்களைக் கற்பிப்பது ஆகிய இரு பகுதிகளை உடையது. மொழியின் அடிப்படைத் திறன்கள் நான்கு. அவை, கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகும். இவற்றை கொள்திறன், வெளியிடு திறன் என இருவகைப்படுத்துவர். அவற்றுள் கேட்டலும், படித்தலும் கொள்திறன்களாகும். பேசுதலும், எழுதுதலும் வெளியிடுதிறன்களாகும். இந்நான்கு திறன்களும் மாணவர்களுக்கு அமைதல் வேண்டும் .

ஒரு மொழியைப் பயன்படுத்தும் பொழுது, அம்மொழி எழுத்துக்களைப் பற்றி நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மொழியில் உள்ள எழுத்துக்களின் வரிசைமுறை இயல்பாக உள்ளத்தில் பதிய வேண்டும். எழுத்துக்களின் ஒலிப்பு முறைகளையும், நன்கு அறிந்து கொள்ள வேண்டும் .

NOT TO BE REPUBLISHED @KTBS






நாம் சிந்திக்கவும், நமது சிந்தனைகளைப் பிறருக்கு உணர்த்தவும் பயன்படும் மொழியைப் பேசும் போதும், எழுதும்போதும், படிக்கும் போதும், எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், தொடர் பிழைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நமது கடமையாகும் .

**அகரவரிசை :**

அகரவரிசை என்பது அ முதல் ஔ வரையுள்ள சொற்களை வரிசைப்படுத்துவது ஆகும். அதாவது எழுத்து வரிசைப்படி முதலில் உயிரெழுத்துக்கள், பின்னர் உயிர்மெய் எழுத்துக்கள் என்று வரிசைப்படுத்த வேண்டும். இதற்கு எழுத்து வரிசைமுறையை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் .

தமிழில் உள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. உயிர்எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் சேர்ந்து உருவாகும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். அவை இருநூற்று பதினாறு ஆகும். ஆயுத எழுத்து ( ஃ ) ஒன்று .

ஆகவே, தமிழ் எழுத்துக்கள் மொத்தம் இருநூற்று நாற்பத்தேழு ஆகும். மேலே சொல்லப்பட்டத் தமிழ் எழுத்துக்களைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால் சொற்களை வரிசை மாற்றிக்கொடுத்தாலும் அவற்றை எளிமையாக வரிசைப்படுத்த முடியும் .

கீழ்வரும் ஊர்ப்பெயர்களை அகர வரிசையில் எப்படி எழுதுவது என்று பார்ப்போம் .

@KTBS NOT TO BE REPUBLISHED

**ஊர்ப் பெயர் :**

கடலூர் , சிதம்பரம் , கோயம்புத்தூர் , சேலம் , திருவண்ணாமலை , ஆற்காடு , காஞ்சிபுரம் , உறையூர் , அரியலூர் , ஏற்காடு .

**அகர வரிசையில் எழுதும்போது :**

1. அரியலூர், 2. ஆற்காடு , 3. உறையூர் , 4. ஏற்காடு , 5. கடலூர் , 6. காஞ்சிபுரம், 7.கோயம்புத்தூர், 8. சிதம்பரம், 9.சேலம், 10. திருவண்ணாமலை.

**எழுத்துப் பிழை :**

சொற்களில் உள்ள ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்தை எழுதுவது எழுத்துப் பிழையாகும். இப்பிழை குறில் , நெடில் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருப்பதாலும் , எழுத வேண்டிய எழுத்தை எழுதாமல் விட்டு விடுவதாலும் , எழுதவேண்டிய எழுத்தோடு எழுதக் கூடாத எழுத்தை இணைத்து எழுதுவதாலும் , ஒலிப்பு முறைகளை அறிந்து கொள்ளாததாலும் எழுத்துப் பிழை ஏற்படுகிறது .

**எடுத்துக்காட்டு :**

அ. இன்றைய நிகழ்ச்சிகள்; - குறில் - நெடில் பிழை

நிகழ்ச்சிகள் - தவறு

நிகழ்ச்சிகள் - சரி

ஆ. கனபதி நகர் - ண: - ன - எழுத்துப்பிழை

கணபதி நகர் - சரியானது .

**எழுத்துவிடு பிழை :**

சொல்லில் எழுத வேண்டிய எழுத்துக்களில் ஒன்றை விட்டுவிடுதல் எழுத்து விடுதல் பிழையாகும். அதனால் அச்சொல்லின் பொருள் மாறிவிடும். அவ்வாறான பிழைகள் ஏற்படாமலிருக்கக் கவனம் செலுத்த வேண்டும் .

©KTBS NOT TO BE REPUBLISHED

**எடுத்துக் காட்டு :**

அ. பெங்களூர் நகல் மாநகராட்சி தேர்தல் நடக்க உள்ளது .

( நகல் என்பது தவறு, நகரில் என்று இருக்க வேண்டும் )

ஆ. எனது நண்பன் கஞ்சிக்குச் சென்று வந்தான் .

( கஞ்சி என்பது தவறு, காஞ்சி என்று இருக்க வேண்டும் )

**மிகை மெய்யெழுத்துப் பிழை :**

வல்லின மெய்யெழுத்துக்களில் ட் , ற் போன்ற எழுத்துக்களின் பின்னர் வரக் கூடாத ஒற்று எழுத்துக்களை சிலர் தவறாக எழுதுவர் .

**எடுத்துக்காட்டு :**

அ. வெட்க்கமில்லை ( வெட்கமில்லை )

ஆ. இன்று திரைப்படக் காட்ச்சி கிடையாது - ( காட்சி )

இ. மாணவர் பயிற்ச்சி ஏடு - ( பயிற்சி )

ஈ. கற்க்கண்டு கொடுத்து மகிழ்ந்தார் - ( கற்கண்டு )

**சொற்பிழை :**

சொற்களில் அமையும் பிழை சொற்பிழை எனப்படும். இவை சொல்லாக்கப் பிழைகள் , ஒற்றுப் பிழைகள் எனப்படும். சொல்லாக்கப் பிழை என்பது, சொற்களை உருவாக்குவதில் அமையும் பிழையாகும் .

**எடுத்துக்காட்டு :**

பெண்கள் அலகு மிக்கவர்கள் ; அலகு என்பது பறவையின் மூக்கைக் குறிக்கும். - அழகு என்பது வனப்பைக் குறிக்கும். எனவே ஒரு எழுத்திற்குப் பதிலாக இன்னொரு எழுத்துவந்து பிழை ஏற்படுதலை ‘மயங்கொலிப்பிழை ’ என்பர் .

ஆகவே, இவ்வாறான சொற்பிழை ஏற்படாமலிருக்க ஒலிப்பு முறையில் கவனம் செலுத்தி எழுத்து ப்பிழை ஏற்படாமல் எழுதப்பழக வேண்டும் .

தமிழ் மொழியிலுள்ள, ல - ள - ழ ; ர - ற ; ன , ண , ந ஆகிய ஒலிகளில் மிக நுண்ணிய உச்சரிப்பு வேறுபாடுகள் உள்ளன. இவற்றின் ஒலிப்பு

@KTBS NOT TO BE REPUBLISHED

முறைகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பலமுறை ஒலித்துப் பழக வேண்டும். இவற்றைச் சரியான முறையில் உச்சரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் .

**பயிற்சி**

**அ. அருஞ்சொற் பொருள் :**

ஒலி - சப்தம் ; ஒளி - வெளிச்சம் ; செம்மையானது - சிறப்பானது ; கொள்திறன் - பெறும்திறன் ; பிழைகள் - தவறுகள் ; மெய் - உடல் ; சொற்பிழை - சொல்லில் ஏற்படும் தவறு ; குறில் - குறுகிய ஒசையுடைய எழுத்து ; நெடில் - நீண்ட ஒசையுடைய எழுத்து ; இணைத்து - சேர்த்து ; வல்லினம் - வலிமையான ஒசையுடைய எழுத்து ; ஆயுதம் - கருவி ; வனப்பு - அழகு ; ஒற்று - புள்ளி ; நுண்ணிய - மிகவும் சிறிய .

**ஆ. சேர்த்தெழுதுக :**

1. படைக்க + பட்ட =
2. மொழியே + ஆகும் =
3. அடிப்படை + திறன் =
4. எழுத்து + பிழை =
5. ஏற்படாமல் + இருக்க =
6. அவ்வாறு + ஆன =
7. எதிர் + சொல் =
8. பெரிய + துணை =

**இ. பிரித்தெழுதுக :**

1. சேர்த்தெழுதுக
2. பிரித்தெழுதுக

@KTBS NOT TO BE REPUBLISHED

3. சொற்பிழை

4. நாற்பத்தேழு

5. உயிரெழுத்து

6. மெய்யெழுத்து

7. இப்பிழை

8. அச்சொல்

9. வெட்கமில்லை

10. கற்கண்டு

**ஈ. வாய்மொழி வினாக்கள் :**

1. மொழி யாரால் படைக்கப்பட்டது ?
2. மக்கள் கூடி வாழ்வதற்குச் சிறந்த கருவி எது ?
3. மொழியினை எவ்வாறு வகைப்படுத்துவர் ?
4. அகர வரிசை என்றால் என்ன ?
5. சொற்பிழை என்றால் என்ன ?
6. தமிழ் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை ?

**உ. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1. ஒரு மொழியினை எவ்வாறு வகைப்படுத்துவர் ?
2. தமிழ் மொழியில் உள்ள உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களை எழுதுக ?

©KTBS
NOT TO BE REPUBLISHED

3. உயிர்மெய் எழுத்து எவ்வாறு உருவாகிறது ?

4. எழுத்துப்பிழை என்றால் என்ன ?

5. மயங்கொலிப் பிழை என்றால் என்ன ?

6. தமிழ் மொழியில் மிக நுண்ணிய உச்சரிப்பு வேறுபாடு உள்ள ஒலிகள் யாவை ?

7. எழுத்து விடுபிழை என்றால் என்ன ?

8. மாணவர்களுக்குத் தேவையான நான்கு திறன்கள் யாவை ?

**ஊ. எதிர்சொல் தருக :**

1. கூடி ×
2. கடந்த காலம் ×
3. நாகரிகம் ×
4. பகுதி ×
5. அம்மொழி ×
6. நன்று ×
7. எளிமையாக ×
8. தவறு ×
9. நண்பன் ×
10. நகராட்சி ×

**எ. இரண்டு அல்லது நான்கு வரிகளில் விடையளிக்க :**

1. மொழியின் பயன்களை எழுதுக ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

2. மொழிக் கல்வியின் பகுதிகள் யாவை ? அவற்றின் பயன்கள் யாவை ?

3. ஒரு மொழியை பயன்படுத்தும் பொழுது கவனிக்க வேண்டியவை யாவை ?

4. அகரவரிசையில் சொற்களை வரிசைப்படுத்துவது எவ்வாறு ?

5. எழுத்துப்பிழை எவ்வாறு ஏற்படுகிறது ?

**ஏ. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. மொழி, மக்களால் படைக்கப்பட்ட ஒரு ____________ ஆகும் .

2. கேட்டலும், படித்தலும் _______________ எனப்படும் .

3. ___________, ____________ வெளியிடும் திறன்களாகும் .

4. செய்தியைப் பிறருக்கு எடுத்துக்கூற __________ பெருந்துணை புரிகின்றது .

5. குறுகிய ஓசையுடைய எழுத்து _____________ எனப்படும் .

6. நீண்ட ஓசையுடைய எழுத்து _______________ எனப்படும் .

**ஐ. செய்முறைப் பயிற்சி :**

1. கன்னட மொழியின் சிறப்பையும் புகழையும் பற்றிப் பாடப்பட்டுள்ள பாடல்களைக் குறித்து அறிந்து கொள்க .

2. பாரதியார், பாரதிதாசன் போன்றோர் நம் தமிழ்மொழியைப் பற்றிப் பாடியுள்ள பாடல்களைத் தொகுக்க .

© KTBS NOT TO BE REPUBLISHED

**3. தமிழ் எண்களை அறிவோம் :**

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | க | 6 | கூ |
| 2 | உ | 7 | எ |
| 3 | ௩ | 8 | அ |
| 4 | ச | 9 | கூ |
| 5 | ரு | 10 | க0 [ய] |

அரபு எண்ணுக்குரிய தமிழெண்ணைப் பொருத்துக :

| அரபு எண் | தமிழ் எண் | |
|---|---|---|
| 5 | கூ | |
| 6 | எ | |
| 7 | அ | |
| 8 | ய | |
| 10 | ரு | |

©KTBS NOT TO BE REPUBLISHED

**4. திறன் வளர் தொடர் பணி :**

1. முக்கனி என்பது ஒரு தொகைச் சொல் ஆகும். முக்கனி மா , பலா, வாழை ஆகிய மூன்று பழங்களைக் குறிக்கும் . அது போல் கீழ் உள்ள தொகைச் சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன என எழுதுக.

**மாதிரி :**

1. முக்காலம் - இறந்தகாலம் , நிகழ்காலம் , எதிர்காலம் .
2. முத்தமிழ் -
3. நாற்றிசை -
4. ஐம்பொறி -
5. எண்திசை -
6. நவதானியங்கள் -

✤ ✤ ✤

# பாடம் 7

# சர்வக்ஞர்



கன்னட இலக்கியவானில் சர்வக்ஞர் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துள்ளார். தமிழ்மொழியில் திருக்குறள் இரண்டு வரிகள் மூலம் நீதிகளையும் , பொதுமைகளையும் விளக்குவதைப்போல் சர்வக்ஞரின் மூன்று வரிக் கவிதைகள் கன்னடத்தில் நீதிகளையும் , பொதுமைகளையும் பன்னெடுங்காலமாகப் பரப்பி வருகிறது என்பதை உணர வேண்டும் .

NOT TO BE REPUBLISHED @KTBS

### தீவினையாளன் ஈட்டியது பிறர்க்கே

1. செல்வம் இருக்குங்கால் உண்ணவில்லை ; ஆடை அணி
இல்லை ; பிறர்கும் வழங்கவில்லை - நல்காத
அன்னான் உடைமையெலாம் , சர்வக்ஞ ! கள்ளனுக்கும்
மன்னனுக்கும் போய்ச் சேரும் சொத்து !

2. வேம்பு பழுத்தாலும் தின்னுதற் கேற்றதோ ?
தீம்பு செய்வோன் பெற்றசெல்வம் மண்ணில் புதைந்திடினும் ,
கொண்டநிலம் செல்வம் விழுங்கிவிடும் ; சர்வக்ஞ !
வண்மைமிகு மாந்தனென வாழ் .

## அ. ஆசிரியர்குறிப்பு :

சர்வக்ஞர் ஹாவேரி மாவட்டத்திலுள்ள, இரேகெரூருக்கு அருகிலுள்ள, அப்பலூராரைச் சேர்ந்தவர். இவருடையக் காலம், சுமார் 16 - ஆம் நூற்றாண்டு என்பர். இவருடைய மூன்று வரிகள் கொண்ட பாடல்கள், இவருடைய அடையாளங்கள். இவரின் பாடல்களில் தர்மம் , நீதி , அறிவு , வைராக்கியம் முதலியவை உள்ளடக்கிய பாடல்கள் நமக்குத் தெளிவுப்படுத்துகிறது .

## ஆ. அருஞ்சொற்பொருள் :

இருக்குங்கால் - இருக்கும் வரை , உள்ளவரை ; உண்ணவில்லை - சாப்பிடவில்லை ; அணி - ஆபரணங்கள் , அணிகலன்கள் ; நல்காத - வழங்காத , கொடுக்காத ; அன்னான் - அப்படிப்பட்டவன் , அத்தகையவன்; உடைமை - சொத்து ; வேம்பு - வேப்பங்காய் ; பழுத்தாலும் - பழமானாலும்; தின்னுதல் - சாப்பிடுதல் , உண்ணுதல் , உட்கொள்ளுதல் ; தீம்பு - தீமை ; விழுங்கி - உண்டு ; வண்மை - வளம் , வழங்குதல் ; மாந்தர் - மனிதர் .

## இ. கருத்துரை :

செல்வம் கையில் இருக்கும்போது, செலவு செய்து சாப்பிட வில்லை. அழகைக் காட்டும் ஆடை, அணிகலன்களை அணிந்துகொள்ளவில்லை. தம்மோடு வாழ்பவர்க்கும் கொடுக்கவில்லை. வழங்காமல் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் அவனின், சொத்தெல்லாம் சர்வக்ஞ ; திருடனுக்கும், அரசனுக்கும் போய்ச் சேர்ந்துவிடும் சொத்தாகும் .

வேப்பங்காய் பழுத்தாலும் உண்பதற்கு ஏற்றதாக இருக்காது. தீமையைச் செய்பவன் தீமையால் பெற்ற செல்வத்தை மண்ணில் புதைத்து வைத்தாலும் அவனுக்குப் பயன்படாது. அச்செல்வம் அந்நிலத்தில் மறைந்துவிடும் ஆகவே சர்வக்ஞ, செல்வம் இருக்கும்போதே ஈகையை வழங்கி மனிதனாக வாழ்க .

©KTBS NOT TO BE REPUBLISHED

## மொழிப்பயிற்சி

**அ. ஒலி நயச் சொற்களை எழுதுக :**

(எடுத்துக்காட்டு) வேம்பு - தீம்பு

1. உண்ணவில்லை -
2. கள்ளன் -
3. இல்லை -
4. சொத்து -
5. மண்ணில் -

**ஆ. சேர்த்து எழுதுக :**

இருக்கும் + கால் =

உடைமை + எலாம் =

போய் + சேரும் =

புதைந்து + இடினும் =

மாந்தன் + என =

**இ. எதிர்ச் சொல் தருக :**

தீம்பு ×

வாழ் ×

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஈ. சொந்த வாக்கியத்தில் பயன்படுத்துக :**

உண்ணவில்லை ,

ஆடை ,

மண்ணில் ,

செல்வம் .

**உ. இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக :**

1. " கள்ளனுக்கும் மன்னனுக்கும்

   போய்ச்சேரும் சொத்து ".

2. " கொண்ட நிலம் செல்வம் விழுங்கிவிடும் ; சர்வக்ஞ ".

**ஊ. கீழ்வரும் வினாக்களுக்கு ஒருவரியில் விடை எழுதுக :**

1. செல்வம் இருக்கும்போது என்ன செய்யவேண்டும் ?
2. செல்வம் இருக்கும் போது யாருக்கு வழங்க வேண்டும் ?
3. கள்ளனுக்கும், மன்னனுக்கும் போய்ச்சேருவது எது ?
4. வேம்பு எதற்குப் பயன்படாது ?
5. தீம்பு செய்வோன் செல்வம் என்னவாகும் ?
6. நல்ல மனிதனாக எப்படி வாழவேண்டும் ?

**எ. மூன்று, நான்கு வரிகளில் விடை எழுதுக :**

1. தீவினையாளனின் செல்வம் யார் யாரிடம் போய்ச் சேரும் ?
2. நல்ல மாந்தனாக வாழ என்ன செய்ய வேண்டும் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

## ஏ. செயல்பாடுகள் :

1. காந்தியைப் பற்றி பத்து வரிகள் எழுதுக .
2. கருநாடகத்தின் முக்கிய நதிகளை அறிக .

## ஐ. லகர, ளகர, ழகர வேறுபாடுகளை அறிக :

1. இலை - தழை
   இளை - மெலிந்துபோதல்
   இழை - நூல் .
2. கலை - ஆண்மான் , ஓவியம்
   களை - அயர்வு , தளர்ச்சி , நீக்கல்
   கழை - மூங்கில்
3. உலவு - திரிதல்
   உளவு - வேவு , ஒற்றறிதல்
   உழவு - பயிர்த் தொழில்
4. கிலி - பயம் , அச்சம்
   கிளி - கிளிப்பிள்ளை , கிள்ளை
   கிழி - துண்டாக்குதல்
5. ஒலி - ஓசை , சப்தம் , கூச்சல்
   ஒளி - வெளிச்சம்
   ஒழி - நீக்கு

@KTBS NOT TO BE REPUBLISHED

6. வலி - நோவு

வளி - காற்று

வழி - பாதை

**ஒருமை பண்மைப் பெயர்கள் :**

1. எழுத்து - எழுத்துக்கள்

கருத்து - கருத்துக்கள்

வாக்கு - வாக்குக்கள்

தோப்பு - தோப்புக்கள்

செடி - செடிகள்

**வாழ்க்கைத் திறன்கள்;**

**நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் :**

நீர் நிறைந்த கால்வாயில் குழந்தை தவறி விழுந்து விட்டது. அப்போது நீ என்ன செய்வாய் ?

அ.உடனே அலறுவாயா ?

ஆ.மற்றவர்களைக் கூப்பிடுவாயா ?

இ. அல்லது நீயே ஓடிச்சென்று நீந்தி காப்பாயா ?

இதில் எதைச் செய்வாய் என சிந்திப்பாய் .

**விழுமியக் கல்வி :**

ஒவ்வொரு மாணவ , மாணவியரும் தினமும் காலையில் பள்ளிக்குச் சென்று தமது வகுப்பறைகளை தூய்மை செய்ய வேண்டும். நான் ஏன் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். நற்பணியை தினமும் ஆற்ற வேண்டும் .

✤ ✤ ✤

NOT TO BE REPUBLISHED @KTBS

# பாடம் 8

## குழந்தைகளும் இன்றைய கல்வியும்

### ( உரையாடல் )



NOT TO BE REPUBLISHED @KTBS

பங்குகொள்வோர் : தமிழாசிரியர், மாணவன் சந்திரனின் பெற்றோர் ரகுராமன், அமுதா .

ரகுராமன் : ஐயா, வணக்கம் ! நான் தங்களிடம் படிக்கும் மாணவன் சந்திரனின் தந்தை , இவர் என் மனைவி அமுதா .

அமுதா : வணக்கம் ஐயா, தாங்கள் வரச் சொன்னதாக பக்கத்து வீட்டுப்பையன் சொன்னான். அதனால் தான் தங்களைப் பார்க்கலாம் என்று இங்கு வந்தோம் .

ஆசிரியர் : ஆமாம் . உங்களிடம் நேரில் பேச வேண்டியிருந்ததால் வரச்சொன்னேன். உங்கள் மகன் சந்திரன் பல நாட்களாகப் பள்ளிக்கு வரவில்லையே ஏன் ?

ரகுராமன் : ஐயா, நான்தான் அவனிடம் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று கூறிவிட்டேன் .

ஆசிரியர் : என்ன ! பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்கவேண்டிய தாங்களே அவனைப் போக வேண்டாமெனத் தடுத்து விட்டீர்களா ? என்ன ஆச்சரியம், கல்வி கற்கும் வயதில் இப்படியொரு

தண்டனையை நல்கிவிட்டீர்களே ! அரசாங்கம் குழந்தைக் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. அதற்காகத் தொலைக் காட்சிகளிலும், வானொலிப் பெட்டியிலும் அறிக்கைகள் மூலமும், விளம்பரம் மூலமும் பொதுமக்களாகிய நமக்கு தெரிவிக்கிறது. அப்படி இருந்தும் நீங்கள் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று தடுத்தது இழிவல்லவா ரகுராமரே ?

ரகுராமன் : எங்கள் குடும்பம் மிகப் பெரியது. 3 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் இருக்கின்றனர். என்னுடைய சிறிய வருமானத்தை மட்டும் வைத்துக் கொண்டு குடும்பம் நடத்த முடியவில்லை. எனவே, சந்திரனை சிறு வேலைக்கு அனுப்பி வைத்தேன். அவன் கொண்டுவரும் சிறுதொகை எங்களுக்குச் சற்றே பயனளிக்கிறது ஐயா!

ஆசிரியர் : தாங்கள் தங்களுடைய குடும்ப சுமையைக் கூறுகிறீர்கள். அந்த சுமையைக் குறைப்பதற்காகத்தான் அரசு குழந்தைகள் படிக்க புத்தகம் , சீருடை , நோட்டுப் புத்தகங்கள், பைகள், மதிய உணவு , ஊக்கத் தொகை முதலியவற்றை வழங்குகிறது. அதோடு உயர் நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு மிதிவண்டி, அறிவியல் , கணிதப் பாடத்திற்குத் தொடர்புடைய பொருட்களை செய்ய ரூபாய் ஐந்தாயிரம் ஊக்க நிதியுதவியும் வழங்குவதை நீங்கள் கேள்விப்படவில்லையா ?

அமுதா : ஐயா! நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனால் எங்களது வறுமைக் கொடுமையைத் தீர்க்க அதைத்தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லையே. எனவே தான் அவனை வேலைக்கு அனுப்ப வேண்டியதாயிற்று .

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் : அம்மா, குழந்தைப் பருவத்தில் அவர்களது பணி படித்து வளர்ந்து ஆளாவதன்றி பொருள் ஈட்டுவது அன்று என்பதை நீங்கள் உணரவில்லையே ! இதனால் தற்போது உங்களுக்கு அணில் போட்ட மணல்போல் உதவி கிடைக்கலாம். ஆனால் சந்திரனின் எதிர்காலம் என்னவாகும் என்று நீங்கள் சிந்தித்ததுண்டா ? நம்முடைய பெரியோர்களில் சிலரும் கல்வியை இடையில் விட்டு விட்டு பிறகு பள்ளியில் சேர்ந்து படித்து மாமேதைகளாக மாறியதை நீங்கள் தெரிந்துக் கொண்டால் நன்று .

ரகுராமன் : எதிர்காலத்தில் படித்தப்பின்பு ஏதாவது ஒரு வேலையைப் பார்க்கத்தானே போகிறான், அதை இப்போதே செய்கிறான். அவ்வளவுதான், இதனால் என்ன பாதிப்பு ஏற்படப் போகிறது .

ஆசிரியர் : என்ன பாதிப்பு என்று தானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன் கேளுங்கள். குழந்தைப் பருவத்திலேயே அவனை வேலைக்கு அனுப்புவதால் அவனது கல்வி பாதிக்கப்படும்; மகிழ்ச்சியான சூழ்நிலை மாறிவிடும். பழக்க வழக்கங்களில் பெருத்த மாற்றம் உண்டாகும். அறிவு வளர்ச்சி குறைந்து, சிந்திக்கும் ஆற்றலே இல்லாமல் போகும். எல்லாவற்றிற்கும் மேலாக அவனது உடல் நலம் பெரிதும் பாதிக்கும். அதுமட்டுமல்ல, உங்களுடைய பேச்சுக்கு அவன் கட்டுப்படாமலும் போகலாம் .

அமுதா : என்ன ! வேலைக்குப் போவதால் அவனுக்கு இத்தனை துன்பங்கள் ஏற்படுமா ?

@KTBS NOT TO BE REPUBLISHED

ரகுராமன் : ஐயா, அப்படியானால் நாட்டில் இவனைப் போன்றோர் வேலைக்குப் போவதில்லையா ? அவர்களுக்கு இத்தகைய பாதிப்புகள் ஏற்படாதா?

ஆசிரியர் : சந்திரன் போன்று பலர் படிப்பை விட்டுவிட்டு, குழந்தைப் பருவத்திலேயே தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். அவர்களைக் கல்வி கற்கும்படி செய்ய அரசு பல நல்ல திட்டங்களை அறிவித்துள்ளது. குழந்தைகளைத் தொழிற்கூடங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதும் தவறு. குழந்தைகளை பணிக்கு அமர்த்துவதை ' 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் சட்டம்' தடை செய்கிறது. சமுதாயமோ, பெற்றோரோ, ஆசிரியர்களோ, குழந்தைகளின் கல்விக்குத் தடை ஏற்படுத்தினால் ' கல்வி கற்கும் உரிமைச்சட்டம் ' மூலம் தண்டனையை வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது .

ரகுராமன் : அரசாங்கமே சட்டம் போட்டு இவற்றைத் தடுத்துள்ளதா ஐயா ?

ஆசிரியர் : ஆமாம் சட்டத்திற்குப் புறம்பாகச் சில தொழிலகங்கள், இவ்வாறு படிக்கும் குழந்தைகளை வேலைகளில் அமர்த்திக் கொள்கின்றன. குழந்தைகள் மிகக் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள் ; வேலையைத் தவிர பிறசெயல்களில் ஈடுபடமாட்டார்கள். இக்காரணங்களால் தொழிற்சாலைகள் உற்பத்தியை நோக்காகக் கொண்டு, குழந்தைகளை வேலைக்கு அனுமதிக்கின்றன. இதனால் பெரியவர்களுக்கு வேலையில்லாத நிலையும் ஏற்படுகின்றது, அல்லவா ? அதனால் அரசு இத்தகைய சட்டங்களை இயற்றியுள்ளது .

© KTBS NOT TO BE REPUBLISHED

| | | |
|---|---|---|
| ரகுராமன் | : | தாங்கள் கூறுவது உண்மைதான் ஐயா! குழந்தைகளின் உடல்நலம், மனநலம் பாதிக்கப்படும் என்கிறீர்கள்.இத்தகையத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெரியவர்களின் உடல் நலமும் பாதிக்கப்படும் அல்லவா ? |
| ஆசிரியர் | : | உடல் நலம் பாதிக்கும் தொழிற்சாலையின் குறைபாடுகள் பெரியவர்களைவிடக் குழந்தைகளை மிக விரைவில் பற்றிக் கொள்ளும். அவர்களை நோயாளிகள் ஆக்கிவிடும் . |
| அமுதா | : | எழுதுகோலை பிடிக்க வேண்டிய கரங்களில் இயந்திரங்களின் இரைச்சலாலும் தூசு தும்புகளாலும் அவர்கள் படும் வேதனைகளை என் கண் முன்னே கொண்டு வந்துபார்க்கும் போது என் நெஞ்சம் பதைக்கிறது ஐயா . |
| ஆசிரியர் | : | ஆமாம் . . . அம்மா, தென்றல் காற்றில் அசைந்தாட வேண்டிய மலர்கள், வெப்ப அனலினாலும் கொதிக்கும் உலைகளிலும் வெந்து நொந்து சருகாகலாமா ? புத்தகங்கள் இருக்க வேண்டிய கைகளில் தொழிற்கருவிகள் இருப்பது நல்லதா ? இதற்கு யார் காரணம் ? பெற்றோர்கள் அன்றோ? |
| அமுதா | : | உண்மை தான் ஐயா, குழந்தைகள் துன்பப்படக் கூடாது. என் மகனும் இதில் அகப்படக் கூடாது. நாட்டுக் குழந்தைகளும் அகப்படக் கூடாது. இதை மாற்றியே தீர வேண்டும். அரசாங்கத்தின் உதவியைப் பெற்றே என் குழந்தைகளைப் படிக்க வைப்பேன் ஐயா . |
| ஆசிரியர் | : | ஆமாம் அம்மையே ! நமது அரசியல் சட்டம் கூறுவது போலவே 6 முதல் 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் இலவசக்கல்வி வாய்ப்பைத்தருகிறது. அவற்றின் மூலமாக வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் பெற்று நமது குழந்தைகளைக் கட்டாயமாகப் |

© KTBS NOT TO BE REPUBLISHED

பள்ளிக்கு அனுப்பவேண்டும். மேனாட்டுக்குச் சமமாக கல்வியைப் பயிற்றுவித்து நமது நாட்டை உயர்த்துவோம் .

ரகுராமன் : ஐயா நாளை முதல் சந்திரன் தொடர்ந்து பள்ளிக்கு வருவான். இனிமேல் நில்லாமல் வருவான். தங்களைச் சந்தித்ததனால் நாங்கள் புதிய பாடம் கற்றுக் கொண்டோம். இதனைப் பிறருக்கும் எடுத்துக் கூறி இக்கொடுமையை மாற்றுவோம். நாங்கள் சென்று வருகிறோம் ஐயா!

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி ! சென்று வாருங்கள் .

**அருஞ்சொற் பொருள் :**

சற்று - சிறிது , கொஞ்சம் ; வறுமை - ஏழ்மை ; பணி - வேலை ; பொருள் ஈட்டுவது - பொருள் சேர்ப்பது ; உணரவில்லை - தெரிந்துகொள்ளவில்லை ; சிந்தித்ததுண்டா - நினைத்ததுண்டா ; மேதை - அறிவாளி , சான்றோர் ; கட்டுபடாமல் - அடங்காமல் ; சருகு - காய்ந்த இலை ; மேனாடு - வெளிநாடு .

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**அ. சரியான விடையைத் தெரிவு செய்க :**

1. எங்கள் குடும்பம் _________ . [ சிறியது , பெரியது ]
2. அவன் கொண்டு வரும் _________ [ சிறுதொகை , பெருந்தொகை]
3. அரசு பல நல்ல _________ அறிவித்துள்ளது .[ சட்டங்களையும் , திட்டங்களையும்]
4. என் _________ பதைப்பதைக்கிறது ஐயா. [ நெஞ்சம் , கொஞ்சம்]
5. இனிமேல் _________ வருவான் . [ செல்லாமல் , நில்லாமல் ]

**ஆ. பொருத்தி எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| 1. | 6 முதல் 14 வயது | - | சட்டங்கள் இயற்றியுள்ளது |
| 2. | மேனாட்டுக்கு இணையாக | - | மதிய உணவு |
| 3. | வெந்து நொந்து | - | கல்வி பயிற்றுவிக்க வேண்டும் |
| 4. | அரசு | - | கட்டாயக் கல்வி |
| 5. | பள்ளியில் | - | சருகாகலாமா . |

**இ. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1. ஆசிரியர் யாரை பேச அழைத்தார் ?
2. ரகுராமன் யாரைப் பள்ளிக்கு அனுப்பவில்லை ?
3. சந்திரன் எத்தகைய வேலைக்குச் சென்றான் ?
4. உயர்நிலைப்பள்ளிக் குழந்தைகளுக்கு அரசு என்ன வழங்குகிறது?
5. குழந்தைப்பருவத்தில் குழந்தைகளின் பணி என்ன ?
6. குழந்தைத் தொழிலாளர் சட்டம் எப்போது வந்தது ?

**ஈ. மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1. அரசாங்கம் நமக்கு எவ்வெவ்வழிகளில் குழந்தைக்கல்வி பற்றி தெரிவிக்கிறது ?
2. ரகுராமன் தன்மகன் சந்திரனை ஏன் வேலைக்கு அனுப்பினார் ?
3. படிப்பதற்குப் பள்ளிகளிலுள்ள வாய்ப்புகளாக ஆசிரியர் கூறுவன யாவை ?
4. கல்விகற்கும் உரிமைச் சட்டம் யார் யாரை தண்டனைக்குட்படுத்தும்?
5. தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு என்னென்ன நேரிடும் ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

**உ. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1. தொழிற்சாலைகளின் நோக்கமென்ன ? அவர்கள் ஏன் குழந்தைகளை பணியில் அமர்த்துகின்றனர் ?
2. அமுதாவின் மனம் பதை பதைப்பதாகக் கூறி தன் மகனை என்ன செய்வதாகக் கூறுகிறார் ?

**ஊ. மொழிப்பயிற்சி ;**

**1. எதிர்ச் சொல் தருக :**

1. பெரியது ×
2. துன்பம் ×
3. தந்தை ×
4. வந்தோம் ×

**2. சேர்த்து எழுதுக :**

1. தொலை + காட்சி =
2. வானொலி + பெட்டி =
3. உயர்நிலை + பள்ளி =

**எ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1. ஈட்டு
2. உதவி
3. பழக்க வழக்கம்
4. கற்கும் படி

**ஏ. பொருள் தருக :**

1. வேலை -
   வேளை -
2. ஆனை -
   ஆணை -

©KTBS NOT TO BE REPUBLISHED

3. மனம் -

மணம் -

**ஐ. வாக்கியப் பிழையை திருத்துக :**

1. உடல் நளம் பாதிக்கும் .
2. சத்துனவு உன்ன வேண்டும் .
3. அரையின் வெப்ப நிளை அதிகம் .

**ஒ. செயல் பாடுகள் :**

1. மொழி விளையாட்டு : கட்டத்தில் கீழ்க்கண்ட எழுத்துக்களை எழுதி சொற்களை உருவாக்கு :




ண் , டை , டி , தை , லை , னி , ணை .

**ஓ. குழுவிவாதம் :**

மாணவர்களிடையே பேச்சுப் போட்டியை ஏற்படுத்துக .

1. மாணவர்கள் வேலைக்குச் செல்வது நல்லதா ? தீமையா ?
2. வேலைக்குச் செல்ல வேண்டாம் என நண்பனுக்குக் கடிதம் வரைக .
3. மற்ற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் பற்றி விவாதிக்கவும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

# இலக்கணம்

## சொல்லின் வகைகள்

மொழி - பதம் - சொல் என்பன ஒரு பொருள் சொற்கள். ஓர் எழுத்து தனித்தாகிலும், தொடர்ந்தாகிலும் பொருளைக் குறித்து வருவது சொல் எனப்படும். அல்லது பதம் என்றும் கூறுவார்கள் .

சொல்லை பகுபதம், பகாபதம் என இரண்டு வகைகளாகப் பிரிப்பார்கள்.

**1. பகுபதம் :**

ஒரு சொல்லைப் பல கூறுகளாகப் பிரிக்க முடியுமானால் அது ‘ பகுபதம் ’ எனப்படும் .

**எடுத்துக்காட்டு :** ‘ உண்டான் ’

இச்சொல்லை உண் + ட் + ஆன் என்னும் மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். ஆகவே இது பகுபதம் எனப்படும் .

**2. பகாப்பதம் :**

பல கூறுகளாகப் பிரிக்க முடியாத சொல் ‘ பகாபதம் ’ எனப்படும் .

**எடுத்துக்காட்டு :** கல் , மரம் .

இச்சொற்களைப் பல கூறுகளாகப் பிரிக்க முடியாது. ஆகவே இது பகாபதம் எனப்படும் .

**வினாக்கள் :**

1. சொல் என்றால் என்ன ?
2. சொல்லை குறிக்கும் வேறு சொற்களை எழுதுக.
3. சொல்லை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம் ?
4. பகுபதம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

❊ ❊ ❊

©KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 9
# நான்மணிக் கடிகை

C8F2A7

1. நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை - யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கும் எவ்வூரு மூர் .

2. பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்கு
அருக்குக யார்மட்டும் உண்டி சுருக்குக
செல்லா இடத்து சினம் .

**- விளம்பி நாகனார்**

©KTBS NOT TO BE REPUBLISHED

## பாடல் குறிப்பு :

நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை. நான்கு வகையான மணிகள் இழைத்துச் செய்யப்பட்ட ஆபரணம். கடிகை - தோள்வளை என்று கூறப்படும் அணிகலன். அதுபோல நந்நான்கு பொருட்கள் அடங்கிய பாக்களையுடைய நூல். அவை நான்கும் மணிகளைப் போன்றவை.

## ஆசிரியர் குறிப்பு :

இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். இவர் காலம் 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது .

## அருஞ்சொற்பொருள் அறிக :

1. நல்லார் - கல்வியறிவுடையார் ; தம் ஊர் என்று - தமக்குரிய ஊர் என்று ; அல்லா - மேலோரல்லாத ; கடைகட்கும் - கீழோர்க்கும் ;

2. நாட்டாரை - நண்பரை ; நன்றின்பால் - நன்மையில் ; பெருக்குக - உயர்த்துக ; தருக்குக - வெல்க ; அருக்குக - சுருக்கிக்கொள்க .

### பயிற்சி

## அ. கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி :

1. யார் யார்க்குத் தம்மூரென்று ஊரில்லை ?
2. பெருக்க, தருக்க, சுருக்க, வேண்டுவன யாவை ?
3. நான்மணிக்கடிகை - பொருள் கூறி விளக்குக.

**ஆ. பிரித்து காட்டு :**

1. தங்கைத்து =
2. தம்மூரென்று =
3. எவ்வூர் =
4. செல்லாவிடத்து =

**இ. சேர்த்தெழுதுக :**

1. நன்மை + நெறி =
2. அல்வா + கடை =
3. நான்கு + மணி + கடிகை =
4. நான்கு + நான்கு =

**ஈ. எதிர்ச்சொல் தருக :**

1. செல்வர் ×
2. உடையார் ×
3. தருக்குக ×
4. சுருக்குக ×
5. ஒட்டார் ×

**உ. பின்வரும் உரைப்பகுதியில் உள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்தி எழுதுக :**

தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது. பறிப்பதற்குக் கமலா வந்தாள். கூடவே இராணியும், வேணியும் வந்தாள். அப்போது தோட்டத்தில் ஒரு பாம்பு ஓடின. கமலா கத்தினாள், இராணி மட்டும் பயமின்றிப் பாம்பை நெருங்கினார்கள் .

அ). தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது . [ பிழை ]

சரி : ____________________________________________

ஆ). இராணியும் வேணியும் வந்தாள் . [ பிழை ]

சரி : ____________________________________________

@KTBS
NOT TO BE REPUBLISHED

இ). ஒரு பாம்பு ஓடின . [ பிழை ]

சரி : ____________________________________________________

ஈ). இராணி பாம்பை நெருங்கினார்கள் . [ பிழை ]

சரி : ____________________________________________________

**ஊ. பின்வரும் சொற்களில் பிறரை முகம் மலர வைக்கும் சொற்களைக் கண்டறிக :**

1. ஆகா
2. அட , ச்சே !
3. ஓ !
4. நன்றி
5. நன்று
6. சுமார்
7. சகிக்கவில்லை
8. அருமை
9. மோசம்

❊ ❊ ❊

@KTBS
NOT TO BE REPUBLISHED

F7K9G6

# பாடம் 10

# வீரமங்கை இராணி அப்பக்கா

இன்று நாம் அனைவரும் சுதந்திர பாரதத்தில் வாழ்கிறோம். எட்டி உதைத்தாலும் தட்டிக் கேட்க முடியாத நிலையில் பல ஆண்டுகள் அயல் நாட்டார் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தோம். தாய் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்கிய தியாக மூர்த்திகள் பலர். ஆடவர் மட்டுமின்றி மகளிரும் தம் நாட்டின் விடுதலையை வேட்கையாகக் கொண்டிருந்தனர் .

" என்று தணியும் இந்த சுதந்திரத் தாகம்

என்று மடியும் இந்த அடிமையின் மோகம் "

என்று அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட வீர மகளிர் பலர் உண்டு. அவர்களில் கித்தூர் இராணி சென்னம்மாள், ஜான்சி இராணி, உலக்கை ஒபவ்வா போன்றோர் நினைவில் நிற்கின்ற வீரப் பெண்மணிகளாவர். இவர்களைப் பற்றி நாம் முன்பே அறிந்து கொண்டுள்ளோம் .

சுதந்திரத்திற்காகத் தன் கணவனைப் பிரிந்து, அந்நியருக்கு உதவிய தன் கணவனையே எதிர்த்துப் போரிட்ட வீரமங்கை இளைய இராணி அப்பக்கா என்பவரைப் பற்றி இங்கு அறிந்து கொள்வோம் .

கர்நாடக வரலாற்றில் இராணி அப்பக்காவின் பெயர் நீங்கா நினைவைப் பெற்றுள்ளது. இவர் பதினேழாம் நூற்றாண்டில் மேற்குக் கடற்கரையின் மங்களூர் நகருக்கு அருகில் உள்ள ‘ உள்ளால ’ என்ற ஒரு சிறிய சமஸ்தானத்தை ஆண்டு வந்தாள் .



NOT TO BE REPUBLISHED @KTBS

ஆங்கிலேயரின் வருகைக்கு முன் பாரதத்தை ஆளும் கனவைச் சுமந்து பாரத மண்ணில் காலடி வைத்தவர் போர்ச்சுக்கீசியர். வியாபாரம் என்ற பெயரில் கடல் வழியைத் தம் வசமாக்கிக் கொண்டனர். இதைப்பற்றி அறிந்துகொண்டவர் வீரப்பெண்மணி மூத்த இராணி அப்பக்கா. அந்நியர் வருகை நம் சுதந்திரத்திற்கு முள்போன்றது என்பதை உணர்ந்தார் .

மேற்குக் கடற்கரை, வியாபாரத்தில் போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கம் வலுத்துவந்தது.அந்நியரின் ஆதிக்கத்தை சுதந்திரப்பெண்மணி அப்பக்கா விரும்பவில்லை. போர்ச்சுக்கீசியருடன் போர்புரிந்து வெற்றிபெற்றாள். அடிக்கடி போரிட நேர்ந்தால் மக்கள் இன்னலுக்குள்ளாவர் எனக் கருதினாள். எனவே போர்ச்சுக்கீசியருடன் உடன்படிக்கை செய்து கொண்டாள். ஆயினும் அவள் இதயத்தில் அது ஒரு முள்ளாக நெருடிக் கொண்டிருந்தது .

தன் மகள் இளைய அப்பக்காவிற்கு போர் வித்தைகள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தாள். தன் நாட்டின் மீது பற்று வளருமாறு செய்தாள். எனவே தாயின் சுதந்திரத் தாகம் இளைய அப்பக்காவின் இரத்தத்தில் வேரூன்றி வளர்ந்தது. மூத்த அப்பக்கா, தான் இறப்பதற்கு முன் உள்ளால சமஸ்தானத்தை போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்திலிருந்து மீட்க வேண்டும் என்று இளைய அப்பக்காவிடம் வாக்குறுதி பெற்றாள் .

மூத்த அப்பக்காவிற்குப் பிறகு இளைய அப்பக்கா முடிசூட்டிக் கொண்டு உள்ளால சமஸ்தானத்தின் அரசியானாள். அண்டை நாட்டு அரசனான வீரசிம்மனை மணம் செய்து கொண்டாள். வீரசிம்மன் போர்ச்சுக்கீசியரின் நெருங்கிய நண்பன் என்பதை அப்போது அவள் அறிந்திருக்கவில்லை. தன் நாட்டு மக்களை தாயினும் மேலாக மதித்து வந்தாள் அப்பக்கா. எனவே வீரர்களும், குடிமக்களும் அவள் மீது அளவிலா அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர் .

இளைய இராணி அப்பக்கா போர்ச்சுக்கீசியரைப் பற்றித் தன் கணவனுடன் விவாதித்தாள். போச்சுக்கீசியருக்கு வரி செலுத்துவதை நிறுத்த வேண்டும். மிளகு, துணி போன்றவற்றை அவர்களுக்கு விற்பதையும் நிறுத்தவேண்டும் எனக் கூறினாள் .

@KTBS NOT TO BE REPUBLISHED



இராணி அப்பக்காவின் முடிவால் போர்ச்சுக்கீசியரின் நட்பை இழக்க நேரிடும் என எண்ணினான் வீரசிம்மன். அப்பக்காவின் முடிவை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. இருவரும் தனித்தனியாகப் பிரிந்தனர் .

அஞ்சா நெஞ்சம் கொண்ட இளைய இராணி அப்பக்கா போர்ச்சுக்கீசியருக்கு வரி செலுத்துவதை நிறுத்தினாள். தானே சுதந்திரமாக அயல் நாட்டுடன் வியாபாரத்தைத் தொடங்கினாள். அரபு நாடுகளுக்கு தமது கப்பல்கள் மூலம் வியாபாரம் செய்து அதிக இலாபத்தை அடைந்தாள். இதனால் சினம் கொண்ட போர்ச்சுக்கீசியர் தூதுவரை அனுப்பி வரிசெலுத்துமாறு கட்டாயப் படுத்தினர். அதை அப்பக்கா ஏற்றுக் கொள்ளவில்லை. போர்ச்சுக்கீசியர் வீரசிம்மனுடன் இணைந்து அப்பக்கா நாட்டின் மீது போர் தொடுத்தனர் .

" அச்சமில்லை அச்சமில்லை அச்சமென் பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே "

என்ற பாரதியாரின் வீர வரிகளுக்கு ஏற்ப வீராவேசமாக போர்செய்யத் துணிந்தாள். தன் நாட்டின் பாதுகாப்பைக் கருதி அண்டை நாட்டு அரசனான கௌதி வெங்கடப்ப நாயக்கருடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டாள். அத்துடன் கள்ளிக்கோட்டை துரை ஜாவோர் என்பவருடனும் நட்பு கொண்டு உதவியை நாடினாள். இவர்களின் உதவியுடன் வலிமைமிக்க மிகப்பெரிய படை பலத்துடன் போர்ச்சுக்கீசியருடன் போர்புரிந்தாள் .

© KTBS NOT TO BE REPUBLISHED



போர்ச்சுக்கீசியர் தோற்று ஓடினர். அதன் பிறகு உள்ளால சமஸ்தானம் இளைய இராணி அப்பக்காவின் நல்லாட்சியின் கீழ் பல்லாண்டு காலம் நிம்மதியுடன் வாழ்ந்தது .

இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்காக நம் முன்னோர் செய்த தியாகத்தை நினைவு கூர்வோம், மதிப்போம், போற்றி வணங்குவோம். சுதந்திரம் மீண்டும் பறிபோகாமல் பாதுகாத்து வளர்ப்போம். இது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமை என்பதை உணர்வோம், உணர்த்துவோம் .

©KTBS
NOT TO BE REPUBLISHED

**அருஞ்சொற்பொருள் :**

ஆதிக்கம் - மேலாண்மை ; விடுதலை - சுதந்திரம் ; சமஸ்தானம் - குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த பகுதி ; வேட்கை - தாகம் ; பற்று - நாட்டம் , விருப்பம் ; உடன்படிக்கை - ஒப்பந்தம் ; மகளிர் - பெண்கள் ; சினம் - கோபம் .

## பயிற்சி

**1. பாடப் பொருளுணர் திறன் பயிற்சி :**

**அ. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிட்ட இடத்தில் எழுதுக .**

1. இராணி அப்பக்காவின் பெயர் ___________ வரலாற்றில் நிலைத்துள்ளது .

   அ) தமிழக ஆ) கருநாடக இ) ஆந்திர .

2. அந்நியர் வருகை நம் சுதந்திரத்திற்கு _______ போன்றது என்பதை உணர்ந்தார் .

   அ) பனி ஆ) கல் இ) முள் .

3. தாயின் ___________ இளைய அப்பக்காவின் இரத்தத்தில் வேரூன்றியது .

   அ) சுதந்திரவேட்கை ஆ) கொடைக்குணம்

   இ) பணிவுத் தன்மை .

4. தன் நாட்டின் பாதுகாப்பைக் கருதி கௌதியை ஆண்ட _________ என்பவருடன் நட்பு கொண்டார் .

   அ) திம்மப்ப நாயக்கன் ஆ) வெங்கடப்ப நாயக்கன்

   இ) மல்ல சர்ஜன் .

5. இளைய இராணி அப்பக்கா __________ நாட்டுடன் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாள் .

   அ) ஐரோப்பிய ஆ) இங்கிலாந்து இ) அரபு .

**ஆ. ஒரு வாக்கியத்தில் விடையளி :**

1. அப்பக்கா எந்த சமஸ்தானத்தை ஆண்டு வந்தார் ?
2. போர்ச்சுக்கீசியர் எந்த நோக்கத்துடன் பாரதம் வந்தனர் ?
3. இளைய இராணி அப்பக்கா யாரை மணம் முடித்தார்?
4. கள்ளிக் கோட்டையை ஆண்டு வந்தது யார் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

**இ. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1. இளைய அப்பக்காவிற்கு சுதந்திரத்தாகம் வேரூன்றக் காரணம் என்ன ?
2. இளைய அப்பக்கா தன் கணவனிடம் விவாதித்தவை யாவை ?
3. அப்பக்கா எடுத்த முடிவைக் கூறுக.

**ஈ. இடம் சுட்டிக் காட்டுக :**

1. "உள்ளால சமஸ்தானத்தை போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்திலிருந்து மீட்கவேண்டும் "
2. " போர்ச்சுக்கீசியருக்கு வரி செலுத்துவதை நிறுத்த வேண்டும் "

@KTBS
NOT TO BE REPUBLISHED

**2. மொழித்திறன் வளர் பயிற்சி :**

**உ. பிரித்து எழுதுக :**

1. நூற்றாண்டில்
2. காலடி
3. முள்ளாக
4. வாக்குறுதி
5. அளவற்ற

**ஊ. சேர்த்து எழுதுக :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மட்டும் | + | இன்றி | = |
| 2. | இவர்களை | + | பற்றி | = |
| 3. | வசம் | + | ஆக்கி | = |
| 4. | போர் | + | இட | = |
| 5. | உண்டு | + | ஆயிற்று | = |

**எ. பின்வரும் தொடர்களில் புணர்ச்சிப் பிழைகளை திருத்தி எழுதுக :**

1. கடல்கரை
2. தனிதனியாக
3. வான்இடிந்து
4. தாயைப்போன்று
5. பக்கப்பலமாக

## ஏ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

1. தியாக மூர்த்திகள்
2. நிலைத்துள்ளது
3. நல்லாட்சி
4. தனித்தனி .

## ஐ. செயல்பாடுகள் :

1. சுதந்திரத்திற்காக உயிர்த் தியாகம் செய்த தியாகிகளின் பெயர்களை பட்டியல் செய்வதுடன் படங்களைச் சேகரிக்கவும் .
2. அப்பக்காவின் கதையை நாடகமாக நடித்துக் காட்டுக .

@KTBS
NOT TO BE REPUBLISHED

M8N9N9

# பாடம் 11

# பல்சுவைப் பாடல்கள்

## நான்கு கோடி

மதியாதார் முற்றம் மதித்தொரு காற்சென்று
மிதியாமை கோடி பெறும் . 1
உண்ணீர்உண் ணீரென்(று) உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும் . 2
கோடி கொடுத்தும் குடிப் பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும் . 3
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும் . 4

- ஔவையார் .

@KTBS
NOT TO BE REPUBLISHED





### அ. ஆசிரியர் குறிப்பு :

பெயர் : ஔவையார். இவர் சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர் ஒட்டக் கூத்தர் முதலான புலவர்கள் வாழ்ந்த காலத்தில் இவர் வாழ்ந்ததாகக் கூறுவர் .

### ஆ. நூல் குறிப்பு :

புலவர்கள் பலர்பாடிய தனித்தனிப் பாடல்கள் தொகுக்கப் பெற்றுத் ‘ தனிப்பாடல் திரட்டு ’ என உள்ளது. அத்தொகுப்பிலிருந்து இப்பகுதி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. தன் மதிப்பைக் ( சுய மரியாதையை ) காத்துக் கொள்ள விரும்புபவர் கடைபிடிக்க வேண்டிய நிலைகளை இப்பாடல்கள் கூறுகின்றன .

## சொற்களஞ்சியம்

### இ. அருஞ்சொற் பொருள் :

1. மதியாதார் - தம்மைப் பெரியவராக எண்ணி வரவேற்காதவர் ; முற்றம் - வீட்டு வாயில் ; ஒருகால் - (மீண்டும்) ஒரு முறை ; மிதியாமை - செல்லாமல் இருப்பது .

2. உண்ணீர் - உண்ணுங்கள் ; உபசரியார் - வற்புறுத்தி உண்ணுமாறு அழைக்காதவர் ; மனையில் - வீட்டில் ; உண்ணாமை - சாப்பிடாமல் இருத்தல் .

3. கோடி - மிகுதியான பொருள் ; குடி - நல்ல குடும்பம் ; கூடுவது - சேர்வது .

4. கோடானு கோடி - பலகோடி ; நா - நாக்கு; கோடாமை ( சொன்ன சொல் ) தவறாமை.

### ஈ.விளக்கவுரை :

'கோடி' என்பது இலட்சத்தின் நூறுமடங்கு ஆகும். இங்கு எண்ணிக்கையைக் குறிக்காது ' பேரளவு மிகுதியான ' ( குறிப்பிட்டுச் சொல்ல முடியாத பெரிய அளவு ) என்னும் பொருளில் வந்தது. ' கோடி ' என்பதற்கு ' எல்லை ' என்றும் ( தெருக்கோடி ) புதிய ஆடை ( கோடி உடுத்துவது ) என்றும் பொருள்கள் உண்டு .

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

## பொருளுணர் திறன் பயிற்சி

### உ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக .

1. எதை மிதியாமை கோடி பெறும் ?

   அ. உபசரியார் தம்மனை, ஆ. குடிப்பிறந்தார் தம்மனை,

   இ. மதியாதார் முற்றம் .

2. குடிப் பிறந்தாரோடு கூடுவதற்கு ____________________

   அ. முற்றம் மிதிக்க வேண்டும், ஆ. கோடி கொடுக்க வேண்டும்,

இ. உண்ணீர் உண்ணீர் என உபசரிக்க வேண்டும் .

**ஊ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக .**

1. எதை மிதியாமை கோடி பெறும் ?
2. எங்கு உண்ணாமை கோடி பெறும் ?
3. எதைக் கொடுத்து, எவரோடு கூடுவது கோடி பெறும் ?
4. எந்நிலையிலும் எது கோடாமை கோடி பெறும் ?

## மொழித் திறன் வளர்பயிற்சி

**எ. எடுத்துக்காட்டில் உள்ளபடி கீழ் உள்ள எதிர்மறைச் சொற்களுக்கு உடன்பாட்டுச் சொற்களை எழுதுக .**

எ . கா : மதியாதார் × மதிப்பவர்

1. உபசரியார் × ________
2. மிதியாதார் × ________
3. உண்ணாதார் × ________
4. பேசாதார் × ________
5. வழங்காதார் × ________
6. காணாதார் × ________

@KTBS
NOT TO BE REPUBLISHED

## திறன்வளர் தொடர் பணி

**ஏ. பின்வரும் பாடலை படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

வரிசை வரிசையாய் மரம் நடுவோம் - அவை

வழங்கும் உதவியால் பயனடைவோம்

தரிசாய்க் கிடந்திடும் நிலங்களிலும் - மரம்

தழைத்திட உழைப்பதைக் கடமை என்போம் .

பூவும் காய்களும் கனிவதையும் - பிணி

போக்கிடும் மருத்துவப் பொருள் பெறவும்

ஆவல் கொண்டுமே சாலைகளில் - நிழல்

அளிக்கவும் மரங்களை வளர்த்திடுவோம் .

1. மரங்களை எவ்வாறு நடவேண்டும் ?
2. நமது கடமையாக கூறப்பட்டுள்ளது யாது ?
3. மரங்களினால் நமக்கு என்னென்ன கிடைக்கிறது ?
4. சாலைகளில் எதற்காக மரங்களை நடவேண்டும் ?

**ஐ. பொருள் தருக :**

1. வழங்கும் ____________
2. பிணி ____________
3. கனி ____________
4. ஆவல் ____________

**ஒ. பிரித்து எழுதுக :**

1. பயனடைவோம் -
2. உழைப்பதை -

**ஓ. செயல்கள் :**

1. ஆசிரியர் உதவியுடன் மேலுள்ள பாடலை இராகமாகப் பாடிப்பழகு.
2. சாலை ஓர மரங்கள் எவ்வாறு நடப்பட்டுள்ளன என்பதைக் கவனித்து எழுதுக .
3. பஞ்சாயத்து அலுவலங்களில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சியைத் தொகுத்தெழுதுக .

@KTBS NOT TO BE REPUBLISHED

## வாழ்க்கைத் திறன்கள்

**1. சாலையில் நீ நடந்து போய்க்கொண்டிருக்கிறாய். சாலை ஓரத்தில் புதிதாக நடப்பட்டுள்ள மரக்கன்றை ஒரு மெலிந்த பசுமாடு தின்று கொண்டிருக்கிறது. நீ என்ன செய்வாய் ?**

அ. மெலிந்த பசுமாடு தின்னட்டும் என்று விட்டு விடுவேன் .

ஆ. உடனே மாட்டை ஓட்டிவிட்டு பிராணிகள் அதை தின்னா வண்ணம் ஏற்பாடு செய்வேன் .

இ. பஞ்சாயத்து அலுவலகம் சென்று முறையிடுவேன் .

**விடை :**

**2. வனத்துறை அதிகாரிகள் உன் பள்ளிக்கு வந்து மரக்கன்றுகளை விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள், நீ என்ன செய்வாய் ?**

அ. அமைதியாக அமர்ந்திருப்பேன் .

ஆ. அதிகாரிகளிடம் வாங்கி அடுத்தவருக்குக் கொடுப்பேன் .

இ. நானும் ஒன்றை வாங்கி வீட்டிற்கு எடுத்துச் சென்று நட்டு வளர்ப்பேன் .

**விழுமியக் கல்வி :**

மரங்களின் அவசியத்தையும், மதிப்பையும் வலியுறுத்துவது .

காடு வளர்த்தலின் அவசியத்தையும், பாதுகாப்பதையும் அறிவுறுத்துவது .

காடுகளினால் அதிக மழைப் பொழிவதையும், காடுகள் மண் அரிப்பைக் குறைப்பதையும் விளக்குவது .

காடுகள் அழிக்கப்படுவதால் மழை குறையும் என்பதை விளக்குதல் .

✤ ✤ ✤

@KTBS NOT TO BE REPUBLISHED

## பின் இணைப்பு

பாடநூல் தவிர, நூல் நிலையப் புத்தகங்கள், பிற புத்தகங்கள், செய்தித்தாள்கள், வார, மாத இதழ்களைப் படித்தமையைக் காட்டும் விவரங்கள் அடங்கிய படிவம் .

ஒவ்வொரு நூலைப் படித்து முடித்ததும் இப்படிவத்தை நிரப்பி மாணவர் கையொப்பமிட்டு, ஆசிரியரும் கையொப்பம் இடவேண்டும் .

| வரிசை எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் | படிக்கத் தொடங்கும் நாள் | படித்து முடித்த நாள் | மாணவர் கையொப்பம் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

@KTBS NOT TO BE REPUBLISHED

@KTBS
NOT TO BE REPUBLISHED